REGD. M 4642.

திராவிடநாடு

விலை அணா 2 ஆண்டுசந்தா ரூ 7 இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 7 | 20—3—49 | இதழ் 38

6—3—49 தொடர்ச்சி

செக்கோஸ்லோவேகியா

6

[அண்ணாதுரை]

தாய்மொழி இகழப்பட்டு, துருக்கரின் மொழி, துரைத்தன மொழியாக்கப்பட்ட காரணத்தால், செக்கோ நாடு, சீரழிவுபட்டது. மீண்டும் ஜெர்மன் ஆதிக்கம் தலை தூக்கிற்று.

கருத்துக் குழம்பிய சிலர், உண்மையிலேயே தமது தாய்மொழியை விட, ஜெர்மன் மொழி வளமானது, உயர்ந்தது என்று நம்பவுமாயினர். நுண்ணறிவினருக்குத் தெரியும், செக்மொழி, எந்த வகையிலும், பிற மொழிக்குத் தாழ்ந்ததல்ல, என்பது.

உயர்ந்த மொழியோ, உருக்குலைந்த மொழியோ, அது என் சொந்தமொழி என்று ஆர்வமிக்கவர்கள் கருதினர். ஆயினும், ஆதிக்கக்காரர், மிக மிகக் கொடுமையாகச், செக்மொழியை அழிக்கலாயினர்.

ஒரு மொழி துரைத்தனத்திலே இடம்பெற்றுத் தரக்கூடியதல்ல என்ற நிலைபெற்றுவிட்டால், பிறகு, அம்மொழிக்கு எங்ஙனம், செல்வாக்கு இருக்கும்? சட்டம், தாய்மொழியில் இல்லை—கடவுள் சன்னிதானத்திலே தாய்மொழி இல்லை, மருத்துவ மனைகளில் தாய்மொழி இல்லை, என்றால், மக்கள், தாய்மொழியைப் புறக்கணிக்கத்தானே செய்வார்கள். ஒரு நாட்டின் நாணய முறையை, அந்நாட்டுக்கு ஏற்படும் துரைத்தனம் திடீரென ஏற்க மறுத்துவிட்டால், பிறகு, அந்த நாணயத்திலே, வெள்ளியும் தங்கமும் இருப்பினும் கூட மட்டமாகத் தானே மக்களால் கருதப்படும். அது போன்றே, இலக்கிய வளம் நிரம்பியதாக இருப்பினும், மூதாதையர் போற்றி வளர்த்ததாக இருப்பினும், துரைத்தனத்தார், அந்தமொழியை ஏற்க மறுத்துவிட்டால், செல்லாக் காசின் நிலைதானே பெறும்! பெரும்பாலான மக்களின் கண்களுக்கு, உயர் நிலையிலிருப்போராகக் காணப்படுபவர்கள், உத்தியோக மண்டலங்களிலே உள்ளவர்கள், அரச மன்றத்திலிருப்போர், அறிவு பரப்பும் கல்வி நிலையங்களிலிருப்போர், எம்மொழியைப் போற்றி வருகிறார்களோ, அந்த மொழியைத்தானே மேலானது என்று பாமரர் கருத நேரிட்டுவிடும்.

மகன் பேசும் ஆங்கிலத்தைக் கேட்டு வியப்படையும் தந்தை, மேலதிகாரி பேசும் ஆங்கிலத்தைக் கேட்டு ஆச்சரியப்படும் ஊழியர், நம் தமிழகத்திலே அதிகரித்ததும், தானாகவே, தாய்மொழிக்கு ஒருதாழ் நிலை ஏற்பட்டதை நாம் கண்கூடாகக் காணவில்லையா!

'நாலு கோணை எழுத்து' கற்றுக் கொண்டால்தானே பிழைக்கலாம்—என்ற பேச்சு பட்டிதொட்டிகளிலும் பரவிற்றே.

நிகண்டு தெரியும்—நீதிநெறி விளக்கம் தெரியும், என்று கூறினால், இங்கிலீஷ் தெரியாமல் இதெல்லாம் தெரிந்து என்ன பலன்? என்று கேட்டனரே, பலர், நம் நாட்களிலே.

ஐயர்மார் பேசும் மொழி ஆலயங்களிலும், துரைமார்கள் பேசும்மொழி ஆட்சி அலுவலகங்களிலும், இருக்கும் நிலை வந்ததும், தாய்மொழிக்கு இடம், தொட்டில், கட்டில், சமயலிடம், தோட்டம், கழனி என்றாகி விட்டதல்லவா!

தமிழ்ப் பேரறிஞர்களே தமது, மொழித்திறத்தைப் பயனற்றதெனக் கருதும் அளவுக்கு, ஓர் சூழ்நிலை அமைந்துவிட்டதே—அது போல ஏற்பட்டது, செக்கோ நாட்டிலே.

இந்தச் சூழ்நிலையை மாற்றி அமைத்து, மீண்டும் செக்மக்களிடை தாய்மொழிப் பற்றை உண்டாக்கிய மாவீரர்தான், மாசரிக். அவருடைய, அருந்திறன், செக்கோ நாட்டுமக்களை இழந்த இன்பத்தை மீண்டும் பெற உதவிற்று. அவருடைய அறிவுரையை, முதலிலே மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. மொழி வெறி கொண்டவர்—என்று இகழப்பட்டார். முடியாத காரியத்தில் ஈடுபடும் முரட்டுப் பிடிவாதக்காரர் என்று பரிகசிக்கப் பட்டார். ஆனால் மாசரிக், சலிக்கவில்லை—ஓயாது உழைத்தார்—தம் நாட்டு மக்களின் கண்முன், மொழிவளம், அதன் மூலம் நாட்டு வளம், ஆகியவற்றை நிறுத்திக் காட்டினார். மீண்டும் ஓர் விழிப்புணர்ச்சி, ஓர் எழுச்சி,

மொழிப் பற்றுத் தோன்றிற்று. பழைய ஏடுகளைத் தேடித் தேடிப் பிடித்தனர்—செக் மொழியின் சிறப்பினை ஆராய்ந்தறிந்து மகிழ்ந்தனர். இலக்கியச் செறிவுள்ள மொழி, என்று பெருமிதத்துடன் பேசலாயினர். தாய் மொழியை, வேற்று மொழியாளர், சதி புரிந்து சிதைத்தனர், என்பதை அறிந்தனர்.—புதியதோர் ஆர்வம் பிறந்தது. இந்த ஆர்வத்தை அடிப்படையாகக் கொண்டே, அரசியல் கிளர்ச்சி ஆரம்பிக்கப்பட்டது — விடுதலைப் போர் துவக்கப்பட்டது. தாமஸ் மாசரிக், தாய் மொழி ஆர்வத்தைத் தட்டி எழுப்பி, அதன் மூலமாகவே தாய் நாட்டையும் விடுவித்தார்—1918-ல், செக்கோ நாட்டை, தனி அரசு நாடாக்கினர்.

தாய்மொழியை இழந்தால் ஏற்படக்கூடிய இழிநிலையும், தாய்மொழி தழைத்தால், நாட்டுக்கு ஏற்படும் உயர்நிலையும் தெளிவாகத் தெரியும் விதமாக அமைந்திருப்பது, செக்கோ நாட்டு வரலாறு. மொழிப் போராட்டமே, மக்களின் விடுதலைக்கு வெற்றி பெற்றுத் தந்தது, என்பதற்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாக விளங்குவது, செக்கோ நாட்டு வரலாறு.

மொழியைப் பற்றிப் பிரமாதப் படுத்துவானேன், வேற்றுமொழி புகுந்தால் என்ன, அதற்காக ஏன் ஆர்ப்பரிக்கிறாய், என்று பேசும் 'மேதைகள்' செக்கோ நாட்டு வரலாறு காட்டும் பாடத்தைக் கவனிக்க வேண்டுகிறோம். மொழி, வாழ்க்கையின் வழி—அதனை இகழ்வதும், எம் மொழி இருப்பின் என்ன என்று அலட்சியப் படுத்துவதும், தாய் மொழியைப் புறக்கணித்துவிட்டு, வேற்று மொழிக்கு உயர்வு தருவதும், மொழியை மட்டுமல்ல, அந்த நாட்டு வாழ்வையே இழந்து விடுவதாகும். எனவேதான், திராவிட கழகத்தார், தமிழ் இருக்க, வடமொழிக்கு ஏன் இங்கு முடி சூட்டு விழா என்று கேட்கின்றனர்! தாய் தவிக்க, தாதிக்குப் பட்டாடை தருவது ஏன் என்று கேட்கின்றனர். மொழிப் பிரச்னை, மிக மிகச் சாதாரணமானது என்று பேசும் நண்பர்கள், செக்கோ நாட்டு வரலாற்றினைப் பார்த்தாகிலும், தமது போக்கைத் திருத்திக்கொள்ள முன் வரலாகாதா என்று கேட்கிறோம். செக்கோ நாட்டிலே, அன்று தாமஸ் மாசரிக்கும் அவர் தம் தோழர்களும், எத்தகைய அரும்பணி யாற்றி, சீர்குலைந்து போயிருந்த தாய்நாட்டை மீட்டனரோ, அதேவிதமான, அரும் பணிதான், ஆற்றுகின்றனர் திராவிட கழகத்தார். தெளிவுள்ளோர், இதனை உணர்வர்—அடுத்துக் கெடுப்போர் இதனை இகழ்வர். நாட்டு மக்களிலே, நல்லறிவாளர்கள், குறிப்பாக இளைஞர்கள், தாய் மொழிப் பற்று, ஓர் உயிர்ப் பிரச்னை என்பதை உணர்ந்தால், உண்மையிலேயே, தாயகம் விடுதலை பெறும், வீறு கொண்டெழும், புதிய பொலிவும் வலிவும் பெறும். அதற்கான அரும்பணியாற்ற அனைவரும் முன்வர வேண்டுகிறோம்.

✻

கல்சுமந்த கசடர்

15-ம் பக்கத் தொடர்ச்சி

புகழின் பாரம் தெரியட்டும். புறப்படுக.

காட்சி 9.

இடம்:- பாதை

உறுப்பினர்:— கனகன்—விசயன்—வீரர்:

நிலைமை:- [கல் சுமந்து கொண்டு கனக-விசயர். தமிழ் வீரர் உருவிய வாளுடன் வருகின்றனர்]

வீரர்:- நட—நட! நட—நடடா நயவஞ்சக நரியே! வாயால் கெட்ட வகைகெட்ட மூடரே! நடவுங்கள்!

[எதிர்ப்புறமிருந்து வருபவருக்கு]

வீரர்:—புதியபொதி மாடு! சேரன் செங்குட்டுவன், கங்கைக்கரை ஓரத்திலே மேய்ந்து கொண்டிருந்த இந்தப்பொதிமாடுகளை, தமிழகத்துக்குக் கல் சுமக்கச் செய்தான்.

காட்சி 10.

இடம்:—சேரன் கொலுமண்டபம்.

நிலைமை:- [வீரர்கள் வருகை]

வீரர்:— மன்னர் மன்னவா! வெற்றி! வெற்றி!!

வில்லவன்:— வெற்றி வீரரின் தலைவனே, வணக்கம். தமிழரை இழித்துப் பேசிய கனக-விசயரைக் கைது செய்துவந்துள்ளேன். இதோ அந்தக் கசடர்.

சேரன்:— கனகன்! விசயன்! காவலராம் இவர்கள்! கடும் போரிடத் தெரியுமாம்!! எடா மூடர்காள்! கங்கைக் கரையிலே காலந்தள்ளுவதை விட்டு, ஏன் வம்பை விலைக்கு வாங்கிக் கொண்டீர்? என்ன காரியம்செய்கிறோம் என்பது தெரியாது, சிறு செயல் புரிந்தீர். வேங்கையின் வாலை மிதித்தால், அதன் பற்களால் கொல்லப்படுவோம், என்று தெரியாதவன் ஏமாளியல்லவா? ஆரியரே! உயிரைக் காப்பாற்றிக்கொள்ள உங்கள் இனத்தவர் எதையும் விட்டுக் கொடுக்கத் தயாராவீர்கள். போர்என்றால் புகை கிளம்பும் யாகம் செய்வீர்கள்! ஆண்டவனிடம் அஸ்திரம் கேட்பீர்கள்! வாள் வீசத்தெரியாத உங்களுக்கு ஏன் இந்த வம்பு? தமிழரைப் பொன் கேட்டீர் கொடுத்தோம். வாழ இடம் கேட்டீர், தந்தோம்! அந்த வாழ்வு பெற்ற பின்னர் தமிழரையா இகழ்ந்து பேசினீர்?

கனகன்:— மன்னவா? உம் அடி பணிகிறோம்.

சேரன்:— இதிலென்ன ஆச்சரியம்! உமது பரம்பரை, தலைமுறை தலைமுறையாக வீரரின் காலடியிலே, வீழ்ந்ததன்றி வேறு வரலாறு ஏது? எடா மூடர்களே! உமதுவீரத்திற்கு ஒருசான்று கூறமுடியுமா? ஒரே ஒரு சான்று!! வீரரென்று வாயாரப் புகழ்வீர் சிலரை, அவர்கள் யாவரும் இறைவனின் அருளால் அந்த வெற்றிகள் யாவும் கிடைத்தன என்றுதானே கதை. வீரத்திற்குச் சான்று எங்கே? வில்லவா இந்த வீணரை, நமதுமக்கள்காண ஊரெங்கும் அழைத்துச் சென்று, பிறகு, சிறையிலே தள்ளு. தமிழ்வீரர்களே! உங்களுக்கு, என் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகம் உங்களைக் கண்டு பூரிக்கிறது. வில்லவா! உன்வீரம் தமிழகத்துக்கு அழியாப் புகழ் அளித்துவிட்டது. உன்வெற்றி, தமிழர்மீதுவீசப்பட்ட மாசினைத் துடைத்து விட்டது. இதோ பரம்பரையாகச் சேரக் குடியினருக்குச் சொந்தமாக இருந்து வந்த வீரவாள், உன்கையில் இனி இருக்கட்டும்.

(வில்லவன் வாளை ஏந்தி முத்தமிட்டு)

வில்ல:— இந்தவாள் தமிழகத்தின் உயர்வைக்காக்கப் பயன்படட்டும். வீரக்குடியின் வெற்றிவாளை ஏந்தும் யோக்யதையை நான் பெறுவேன் மன்னர் மன்னவா.

[பணிந்து செல்லல்]

—✻—

ஆர்ப்பரிப்பு—கடைசிக்கட்டம்

— ✲ —

வாள் இல்லேயா-எடுத்து வீசு!
வேல்கொண்டு குத்து!
தடிகொண்டு தாக்கு!
நெருப்பிலே பிடித்துத்தள்ளு!
மலைமீதிருந்து கீழே உருட்டு!
நஞ்சுகொடு, பருகட்டும்!
நாகத்தைவிடு, கடிக்கட்டும்!
தேர்ச் சக்கரத்தின் கீழே தள்ளு!
கண்ணைத்தோண்டி எடு!
கைகால்களை ஒடித்துப்போடு!
நாக்கை அறுத்தெடுத்துவிடு!

* * *

ஆதிக்கக்காரன், ஆத்திரமேலிட்டு தன் நிலையைக் குலைக்கும் விதமானதோர் புதிய சக்தியை, புரட்சிச் சக்தியை மூட்டிவிடத் துணிபவரைக் கண்டு, வெகுண்டு கூறிய சுடு சொற்கள், மேலே, பொறித்துள்ளவை. புதிய சக்தி, முழு உருவெடுத்தால், தன் ஆதிக்கம் அழிந்துபடுமே என்ற அச்சம், இத்தகைய ஆர்ப்பரிப்பைக் கிளப்பிவிடுகிறது. என்ன முறையைக் கையாண்டாகிலும், எவ்விதமான கொடுமையைச் செய்தாகிலும், அரும்பும் புதிய சக்தியை அழித்திடவேண்டும் என்ற எண்ணம், வெறி அளவுக்கு ஏற்படுகிறது. பகை படமெடுத்தாடுகிறது! பழி பாவத்துக்கு அஞ்சாது, எதைச் செய்தேனும், தன் ஆதிக்கத்தைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும் என்ற எண்ணம் பிறந்து, ஆதிக்கக் காரனை, ஆட்டிப்படைக்கிறது. அவன், குருவாக இருப்பினும் சரி, கோல் கொண்டோனாக இருப்பினும் சரி, பணந்தேடியாக இருப்பினும் சரி, எந்த வகையான ஆதிக்கம் பெற்றவனாயினும், வேறோர் சக்தி கிளம்புகிறது, தன் ஆதிக்கத்தை அழிக்க என்று தோன்றியதும், முறைகளைப் பற்றித் துளியும் யோசியாமல் எதிர்ப்பை அழித்தே தீருவது என்றுதுணிந்து, இழிசெயலோ இம்சையோ, எதைச்செய்தேனும், வெற்றிபெறவேண்டும் என்பதிலேயே, முனைந்து நிற்கிறான். சாது, முரடனாவான்! பூனை, புலியாகும்!

● ● ●

துவக்கத்திலே, துரைத்தனம் நடத்துபவன், தன்னை எதிர்க்கும் துணிவு யாருக்குமே ஏற்படாது என்று ஆணவமாகவே எண்ணுவது வாடிக்கை. பிறகோ, அவன்செவிக்கு அங்கு கொஞ்சம் இங்கு கொஞ்சமாகக் கிளம்பும் எதிர்ப்பொலி வந்து சேரும்—அலட்சியமாக இருப்பான். தன் வீரப்பிரதாபங்களையும், வெற்றிச் சிந்துகளையும், ஊரே முழக்கிக் கொண்டிருக்கும் போது, இந்த அற்ப எதிர்ப்பொலி, என்ன பலன் தரப்போகிறது, என்றே, எண்ணுவான். ஆணவத்துடன், உறவுகொண்டாடவரும், அலட்சியபுத்தி, எதிர்ப்பொலி, தானாகமங்கி மடிந்துபோகும் கவனிப்பாரற்று என்று கருதுவான். ஆதிக்கக்காரன் விழாக்களிலும் விருந்துகளிலும், கூட்டுத் தோழர்களுக்குப் பரிவு காட்டுவதிலும், குளிர்மொழி பேசுவோரிடம் குலவுவதிலும், காலங் கழித்தவண்ணம் இருக்கும்போது, எங்கோ கிளம்பிய எதிர்ப்பு, அங்கிங்கெனாதபடி எங்கும் பரவி, அரண்மனையின் ஆனந்த அமளிச் சத்தத்தையும் அடக்கிவிடும் அளவுக்கு வளரும். அலட்சியம் மடியும், ஆத்திரம் பிறக்கும்—குறும்புச் சிரிப்பு மறையும், கொக்கரிப்பு ஆரம்பமாகும். புருவத்தை நெரிப்பான் — பற்களை நறநறவெனக் கடிப்பான் — ஏனோ தானோவென்று இருந்துவிட்டோம், நாம் கவனியாமலிருந்து விட்டதால், எதிர்ப்பு வளர்ந்துவிட்டது, முளையிலேயே கிள்ளி எறிந்திருக்கவேண்டும்—செய்தோமில்லை—ஆயினும் என்ன, நமது சக்திக்கு முன்பு, இந்த எதிர்ப்பு எம்மாத்திரம்! ஒரு விநாடியிலேயே இதனை நசுக்கிப்பொசுக்கி,கருக்கிவிட முடியாதா என்ன! — என்று ஆர்ப்பரிப்பான்—அந்த ஆர்ப்பரிப்பு, தன்னை அடுத்துவாழ்வோர், அண்டிப் பிழைப்போர், எடுபிடி ஏவலர், பல்லிளித்துப் 'பவிஷு' பெறுவோர், பாதந்தாங்கிகள், பாராக்குக் கூறுவோர் ஆகிய கூட்டத்தாருக்குத் தைரியம் ஊட்டப் பயன்படும். ஆர்ப்பரிக்கும் ஆதிக்கக்காரனுக்கு அண்டிப் பிழைக்கும் கூட்டம், தூபமிடும்—எதிர்ப்பை ஒரு நொடியிலே அடக்கிவிடும் ஆற்றல் உமக்குண்டு, அதற்கான அருந்திறன் கொண்ட ஆட்களும் கருவிகளும் உண்டு, ஐயனே! அவைகளை ஏவி, எதிர்ப்பை ஒழித்துக் கட்டுக! எமது உள்ளத்தைக் குளிரச்செய்க!—என்று கூறுவர்—ஆதிக்கக்காரன், கட்டவிழ்த்து விடுவான், அடக்குமுறையை—தாக்குதல் ஆரம்பமாகும்—ஆனால், எதிர்ப்பு, நேர்மைக்காகவும் நீதிக்காகவும், மக்களின் நலனையே குறிக்கோளாகக் கொண்டதாகவும் இருப்பின், அடக்குமுறை ஓங்க ஓங்க, எதிர்ப்புச் சக்தியும் ஓங்கும்! ஒரு நொடியிலே அடக்கிவிடலாம் என்ற பேச்சு, கவைக்குதவாததாகிவிடும். அடக்குமுறை கூர் மழுங்கும். இவ்வளவு எதிர்ப்பு இருக்குமென்று எதிர்ப்பார்க்கவே இல்லை, என்று ஆயாசத்துடன், பேசச் செய்யும் ஆதிக்கக்காரனை. இந்த ஆயுதம் பயன்படுமா, வேறு தேவையா, இம்முறையில் தாக்குவது பயனளிக்குமா, வேறுமுறை வகுக்கவேண்டுமா, என்றெல்லாம், பாசறையிலே பேச்சுக் கிளம்பும். ஆணவம், அலட்சியம், ஆர்ப்பரிப்பு, அடக்குமுறை, ஆயாசம், ஆகிய கட்டங்களைத்தாண்டி, ஆதிக்கக்காரன், அச்சம் எனும் கட்டம் வந்து சேருவான். அதுபோது தான், வாள், வேல், தடி, நஞ்சு, நாகம், நெருப்பு, என்று பலப்பல கொடுமைக் கருவிகளைத் தேடுவான் — தன் ஆதிக்கத்தைக் காப்பாற்றிக் கொள்ள, கடுமையான நடவடிக்கை எடுத்தாகவேண்டும் என்ற நிலைமைக்கு வந்து சேருவான்—அவனியிலே, பல்வேறுநாட்டு வரலாறுகளிலே காணப்படும் பாடம், அவனுக்கு அப்போது புரிவதில்லை, அவன் அறிவதில்லை, தான், கடைசிக் கட்டத்திலே வந்துநிற்கிற உண்மையை! அலட்சியப் படுத்தப்படவேண்டியதாகஒருகாலத்திலேதோன்றிய எதிர்ப்பு,இன்று,தன்னிடமுள்ள அடக்குமுறைச் சாதனங்கள் அனைத்தையும் வீசியும் கூட, அணையாத பெருநெருப்பாக, மாறிவிட்டதைக் கண்டு, கலக்கமடைகிறான்—கலக்கம், அவனுடைய கருத்தைமேலும் குழப்புகிறது—காட்டிலுல்லவும் மிருகமாகிறான்.

மக்களாட்சி முறை மலரா முன்னம் ஆதிக்கக்காரர்கள் நாம், முதலிலே, குறிப்பிட்ட, கருவிகளைக் கொண்டே, எதிர்ப்பை

ஒழிக்க முனைவர்—கடைசி நேரத்தில். மக்களாட்சி மலர்ந்தபிறகோ, வாள், வேல், கொண்டுதாக்குவது, நெருப்பில் தள்ளுவது, யானைக்காலில் போடுவது போன்ற முறைகளுக்குப் பதிலாக, பல்வேறு, விதமாகவும் வகையாகவும், 'குற்றங்களை' வகுத்து, இன்னின்ன வகையான குற்றத்துக்கு, இன்னின்ன விதமான தண்டனை என்று குறித்திருக்கும், சட்டம், ஏற்பட்டது. இந்தச்சட்டம், தூக்குத்தண்டனை முதற்கொண்டு, சிறு தொகை அபராதம் கட்டுவது வரையிலே, வழிவகை செய்து தந்திருக்கிறது. எனினும், நாம், மேலே குறிப்பிட்டபடி, மக்களின் நலனைக் குறிக்கோளாகக் கொண்ட 'எதிர்ப்புச்சக்தி' இந்தச்சட்டம் தரும். சவுக்கடியைப் பொருட்படுத்தாமல், வளர ஆரம்பிக்கிறது. ஆதிக்கக்காரர், அச்சம்கொண்டு, எதிர்ப்பைக் கருவறுக்க, புதுப்புதுச் சட்டங்களைப் போடவும், புதியவிதமான தண்டனைகளைக்கண்டு சேர்க்கவும், முனைகிறார். வெள்ளம் வந்தபிறகு, அணைபோடும் திட்டம் போலாகிறது, இந்த முயற்சி. அடக்குமுறையை அவிழ்த்து விட்டுப் பார்த்துச் சலித்துப்போகும் நிலை பிறக்கிறது. வேட்டை நாய்கள், குடலறுத்துத் திரும்புகின்றன, முயலோ, தப்பிவிடுகிறது! வல்லூறு இறகொடிந்து கீழே விழுகிறது, சிட்டுகள், பறந்துபோய் விடுகின்றன! —என்பது போல, எதிர்ப்புச் சக்தியின் மீது, ஏவப்படும், கருவிகள், எதிர்பார்த்த பலனைத் தராமல், போய்விடுகின்றன! மமதை மடிந்து, மருட்சி மூண்டுவிடுகிறது, ஆதிக்கக்காரர் மனதில்.

* * *

இம்முறையிலே, உலகவரலாற்றிலே எண்ணற்ற போராட்டங்கள் நடைபெற்றுள்ளன. மதங்கள் ஒன்றோடொன்று போட்டியிட்டு, நெருப்பையும் புகையையும் கக்கின! மண்டலங்களுக்குள்ளே மாச்சரியங்கள், மூண்டு, கொடுமைகள் தலைவிரித்தாடின! அரசுமுறையிலே மாற்றம் காண்பதற்கான போராட்டங்கள்; அறிவுத்துறையிலே, பழைய கோட்பாடுகளை நீக்கிப் புதுக்கோட்பாடுகளைப் புகுத்துவததற்கான முயற்சியின்போது மூண்டுவிடுகிற போராட்டங்கள், எனும் பல்வேறு வகையான சமயங்களின் போதும், ஆதிக்கக்காரர்கள், எதிர்ப்புச் சக்தியினரை ஒழிக்க, எண்ணற்ற ஆயுதங்களை உபயோகித்தனர்—புதியஆயுதங்களைக்கூட உண்டாக்கினர். எனினும் சூதுமதியினரும் சுரண்டிப் பிழைப்போரும், சுகவாழ்வுக்காகப் பிறரைக் கசக்கிப்பிழிவோரும், ஜாதி வெறியரும் பிறரும், வெற்றிபெறவில்லை—அவர்களின் பயங்கர ஆயுதங்கள், வெற்றியை அவர்களுக்குத் தரவில்லை. மண்ணிலே தியாகிகளின் இரத்தம் சிந்தச்செய்தன அக்கருவிகள்—பூமியைப் புனிதபுரியாக்கவே, உதவின! சிலருடைய வாழ்வை வதைக்க முடிந்தது, வஞ்சகர்களால். ஆனால், குறிக்கோளைக் கெடுத்தொழிக்க முடியவில்லை. இது தெரிந்திருந்தும், தெளிவு பெறாத சிலர், இன்றைய நாட்களிலே, அறிவுத்துறையிலே, ஆதிக்கக்காரருக்கும் அவர் தம் போக்கை எதிர்ப்போருக்கும் இடையே மூண்டுவிட்ட மனப்போராட்டத்தின், தன்மையைஉணர முடியாமல், காட்டுமிராண்டிக் காலத்திலே இருந்தவர்கள் கூவியதுபோல, எதிர்ப்பாளர்களை விட்டுவைப்பதா! ஒழிக்காமலிருப்பதா! வளரவிடுவதா! என்று பேசியும் ஒழிப்பதற்கான திட்டங்களைத் தீட்டிக்காட்டியும்வருகின்றனர்.

* * *

முதல் முறையாகக் குடைபிடித்துக்கொண்டு சென்றவன்மீது மூடமதியினர், கற்களைவீசினராம்! பாபி! கடவுளின் விரோதி!—என்று ஏசினராம்!

"நான், என்னபாபம், செய்தேன்? ஆண்டவனை நான் ஒருநாளும் மறுத்ததில்லையே, ஏன் என்னை இம்சிக்கிறீர்கள்" என்று அவன் கேட்க, "அடபாவி! அஞ்சாது பாபச்செயலைப்புரிந்துகொண்டு, கூசாமல் பொய்யும் பேசுகிறாயா? கெடுமதியாளனே, உன் கரத்திலே இருப்பது என்ன?" என்று கேட்டனர், கபவரால் தூண்டிவிடப்பட்ட கசடர்.

"இது, நிழல்பெறும் முறை! கதிரோன் காய்கிறான்—மண்டை எரிகிறது! வெப்பம் என் உச்சியைத் தாக்காதபடி நிழல் பெற, இந்தச் சாதனம், குடையை உபயோகிக்கிறேன்—இதிலே குற்றம் என்ன?" என்று கேட்டான், குடையைப் பயன்படுத்தியவன்.

குறைமதியினர், "அடபாதகா! சூரியன், ஆண்டவன் படைப்பல்லவா! கதிரோனின் தன்மை, காய்வதுதானே! ஆண்டவன், அளித்த அந்த வெப்பத்தைத் தடுக்கத் துணியும் நீ, தூர்த்தன் தானே! தேவனின் திட்டத்தை, நீ, உன் புதுத்திட்டத்தால் கெடுக்கிறாயே! சூரியனைத்தந்த ஆண்டவன், மனிதனுக்குத் தேவை என்று கருதியிருந்தால், குடையையும் படைத்திருப்பாரே! அவர், படைக்காதிருக்கும்போது அவர் படைத்த சூரியவெப்பத்தைத் தடுக்க குடையைக் கண்டு பிடித்தாயே! இதன் பொருள் என்ன? ஆண்டவனின் செயலை இகழ்கிறாய், பழிக்கிறாய், எதிர்க்கிறாய், என்பதுதானே! நாத்திகப் பயலே! இந்த அக்ரமம் அடுக்குமா?" என்று ஏசி, கற்களை வீசி, தமது 'பக்தி'யைக் காட்டிக் கொண்டனராம்! இவ்வளவு மூடமதியையும் எதிர்த்து, அதன் பயனாக ஏற்படும், கொடுமைகளைச் சகித்துக் கொண்டதாலேதான், உலகு, இன்று, குறிப்பிடத்தக்க அளவு, முன்னேறிற்று. எனினும், மூடமதியினரைச், சூது மதியினர், தூபமிட்டு ஏவிவிடும் சதிச் செயல், நம் நாட்களிலே, நின்றுபோக வில்லை. புதுப் புது உருவெடுத்து வருகிறது!

* * *

நம் நாட்களிலே, அறிவுத் துறையிலே, பெரியதோர், புரட்சி, ஏற்பட்டுக்கொண்டு வருகிறது. இதன் காரணமாக, ஆதிக்கக்காரர்களுக்கு, அச்சம் பிறந்திருக்கிறது. முதலிலே, அவர்கள் அலட்சியமாகத்தான் இருந்தனர் — இன்று அஞ்சுகின்றனர். அச்சம் காரணமாக அவர்கள் மனம் குழம்பிப் போய், ஏதேதோ எண்ணுகிறார்கள்—எதை எதையோ கூறிக் கதறுகிறார்கள்.

இதுகள் பேச்சை, யார் கேட்கிறார்கள், என்ற காலம் போய்விட்டது!

இதுகளுக்கு என்ன தெரியும் பேச!—என்று கூறிய காலம் போய்விட்டது.

இதுகள் பேசி, என்ன சாதிக்கப் போகின்றன—என்று பேசிய காலமும் போய்விட்டது.

ஆயிரம் காக்கைகள் கூடிக் கத்தினாலும் ஒரு கல்லின் முன் எதிர் நிற்குமோ, என்ற பழமொழிப்படி, இதுகள் ஆயிரம் காரணம் காட்டிப் பேசினாலும், நமது மூதாதையரின்

(13-ம் பக்கம் பார்க்க)

இலக்கியம்

★ பழைமையும்—புதுமையும் ★

9–3–49 புதன் கிழமையன்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரவையின் ஆண்டு இறுதி விழா, அறிஞர் அ. சிதம்பரனார் அவர்கள் தலைமையில் நடைபெற்ற பொழுது, தோழர் இரா. நெடுஞ்செழியன் ஆற்றிய சொற்பொழிவு இங்கு தரப்படுகிறது.

“எந்தப் பல்கலைக் கழகத்தில் ஐந்து ஆண்டுகள் படித்துப் பட்டம் பெற்று வெளியேறினேனோ, அதே பல்கலைக்கழகத்தில் ஐந்து ஆண்டுகள் கழித்து நுழையும் வாய்ப்புப் பெற்றதற்குப் பெருமகிழ் வெய்துகிறேன். அன்று நாராயணசாமியாக வெளியேறினேன். இன்று நெடுஞ்செழியனாக நுழைந்துள்ளேன். அன்று கண்ட அதே தோற்றத்தில் இன்று நான் காணப்படவில்லை. உருவத்திலே சிறு மாறுதலைக் காணுகிறீர்கள். ஆனால் உள்ளத்திலே மாறுதலைக்காண இயலாது. அன்றிருந்ததைவிடச் சற்று உறுதிபெற்ற உள்ளத்தோடு இன்று உங்கள் முன் நிற்கின்றேன். புரட்சிகரமான உள்ளத்தைக்கொண்டிருந்ததற்காக என் போன்றோர் மீது சூழ்ச்சிக் கணைகளும், பொறாமைப் பொறிகளும், பயமுறுத்தல் பாணங்களும் ஏவப்பட்டன. அக் காலங்களிலெல்லாம் எம் அருகே நின்று, எங்களுக்கு ஆதரவளித்து, எங்களை ஊக்குவித்ததற்கு ஒரு பெருந்துணையாக விளங்கியவர் இன்று தலைமை தாங்கும் அறிஞர். அ. சிதம்பரநாதனாராவார்கள்.

சொற்பொழிவாற்றுவதற் கென்று நான் குறித்துள்ள பொருள் இலக்கியம் பற்றிய “பழைமையும் புதுமையும்” என்பதாகும். இலக்கியம் என்ற அடிப்படையின் மீது நின்று பழைமையும், புதுமையும் காணவிரும்புகிறேன். இலக்கியத்தைக்காலத்தினால் பழைமையானவை—புதுமையானவை என்று பாகுபடுத்தி அவைபற்றிய தன்மைகளை உங்களுக்குப் பலரும் விதந்தோதியிருப்பார்கள். ஆகவே காலத்தினால் பாகுபடுத்திப் பழைமைப் புதுமை இலக்கியங்களைப் பற்றி விரித்துக் கூற நான் விரும்பவில்லை. இலக்கியங்களிலே கையாளப்படும் பழைமைப்—புதுமைக் கருத்துக்களைப் பற்றியே இங்கு குறிப்பிட விரும்பியுள்ளேன்.

இலக்கியம் என்பதற்குப் பேரறிஞர்கள் பலருங்கூறும் கருத்துக்களை ஒன்று திரட்டிப் பார்க்கும்போது, மக்கள் வாழ்க்கையிலுள்ள விழுமிய கருத்துக்களைச், செவ்விய சொற்களால் விளம்பி நிற்கும் கருவியாகும் என்பது தெள்ளிதின் புலப்படும். உலகிலுள்ள உயர்ந்தோரனைவரும் இலக்கியக் கலையை மற்றெல்லாக் கலைகளிலும் சிரியதாக மதித்துப், போற்றிப், புகழ்ந்து வருகிறார்கள். ஓவியக்கலை, சிற்பக்கலை, இசைக்கலை, நாட்டியக்கலை ஆகிய பல கலைகள் மக்கள் உள்ளத்திலே ஒவ்வொருவகை உள்ள நெகிழ்ச்சியை உண்டாக்குகின்றன. அந்த உள்ள நெகிழ்ச்சிகள் இன்பம் பயக்கின்றன. அந்தக் கலைகள் தனித்தனியே எழுப்பும் உள்ள நெகிழ்ச்சிகள் அனைத்தையும் எழுப்பும் ஆற்றல் வாய்ந்ததாக அமைந்திருப்பது இலக்கியக் கலையேயாகும்.

எடுத்துக் காட்டாக, ஓவியக் கலையைக் காணுங்கள். இயற்கைக் காட்சியை ஓவியமாக்கிக் காட்ட விரும்புகிறான் ஓவியக்காரன். நீல மலையையும், அதனின்றும் இழிந்து வரும் வெள்ளிய அருவியையும், அது பசும் புற்றரையில் பாய்ந்தோடும் பாங்கையும், அது அலைகடலில் சென்று கலக்கும் தன்மையையும் அவன் தீட்டிக்காட்டுகிறான் என்று வைத்துக்கொள்ளுங்கள். இயற்கைக் காட்சியின் பார்வைத் தோற்றத்தைத் தான் ஓவியத்தில் காட்ட முடியுமேயன்றி, மலையின் குளிர்ச்சியையும், அருவியின் கீதத்தையும் பசும்புற்றரையின் மிருதுத்தன்மையையும் அலையின் ஓசையையும் அந்த ஓவியத்தில் காட்ட இயலாது. சிற்பக்கலை பார்வைத் தோற்றத்தோடு பருமனை மட்டுமேதான் காட்டுகிறது. ஒரு அழகிய மங்கையின் உருவம் சிற்பமாக வடிக்கப்படுகிறதென்றால், உள்ளத்தில் ஏற்படும் ஏதாவதொரு நிலைமையைத் தான் முகத்தின் மூலம் தெளிவாக்கிக் காட்ட இயலுமேயல்லாது, உள்ளம் முழுவதையும்திறந்துகாட்டச்சிற்பக் கலையால் முடிவதில்லை. உள்ளத்தில் மகிழ்ச்சி நிறைந்திருந்தால் அதை மட்டும் முகத்தில் காட்ட இயலும்; வேதனை நிறைந்திருந்தால் அழுகையை முகத்தில் காட்ட இயலும். இசை இனிய ஒலியைத்தான் கொடுக்கும். நாட்டியம் அசைவை மட்டுந்தான் காட்டும். இலக்கியம் இவையனைத்தையும் தெளிவாக்கிக் காட்டும். இலக்கியம் மலையின் தன்மையைக் கூறும், அதன் நிறத்தை விளக்கும், அருவியின் கீதத்தை உணர்த்தும், இயற்கையின் எழிற் சித்திரங்களையெல்லாம் கொண்டு வந்து கொட்டும், மக்கள் உள்ளத்தில் தாண்டவமாடும் எண்ணங்கள் அனைத்தையும் கொண்டுவந்துநிறுத்தும். ஆகவேதான் இலக்கியம் உள்ளத்தை உருவாக்கும் சிறந்த கலையாக—கருவியாக நாகரிக முதிர்ந்த நாட்டவரால் பயன் படுத்தப்படுகிறது.

மக்கள் வாழ்க்கையைப் பண்படுத்தும் சிறந்த ஆயுதம், இலக்கியமாகும். பாமரர்களின் வாழ்க்கை, படித்தவர்கள், உயர்ந்தவர்கள், அறிந்தவர்கள் எனப்படுவோரின் வாழ்க்கையைப் பின்பற்றி அமைகிறது. படித்த உயர்ந்தவர்களின் வாழ்க்கை அவர்கள் கற்ற கல்வியறிவையும் அனுபவத்தையும் பொறுத்து அமைகிறது. கல்வி, அதற்கு ஆதாரமாக விளங்கும் நூல்களைப் பொறுத்தது. அதாவது இலக்கியங்களைப் பொறுத்து அமைகிறது. இலக்கியங்களைப் பொறுத்துக்கற்றோரின் உள்ளங்களும், அவற்றைப் பொறுத்து அவர்கள் வாழ்க்கையும், அந்த வாழ்க்கையைப் பொறுத்துப் பாமரர்களின் வாழ்க்கையும் அமையக் காண்கிறோம். விழுமிய, வாழ்வுக்குத் தேவையான, உயரிய கருத்துக்களைக் கொடுப்பது—கொடுத்துவருவது—கொடுக்க வேண்டியது இலக்கியமாகும்.

மனிதன் காட்டுமிராண்டி நிலையிலிருந்து நாகரிகமுற்ற நல்ல நிலைக்கு இன்று வளர்ந்து வந்துள்ளான். காட்டுமிராண்டியாக அவன் திரிந்து கொண்டிருந்தபொழுது அவன் உள்ளத்தில் ஏற்பட்ட விழைவுகள் முக்கியமாக இரண்டேதாம். ஒன்று பசி

யாற்றிக்கொள்ளும் விழைவு, மற்றொன்று வாழ்க்கைத் துணையைத் தேடும் விழைவு. அதாவது இணைவிழைச்சு. உலகியலை அவன் அறியத் தொடங்கிய பிறகு அறிவுபெற ஆரம்பித்தான். அறிந்துகொள்ளும் முயற்சி வளர வளர அவனுடைய அறிவும் வளர்வதாயிற்று. அறிவை வாழ்க்கையியலுக்குப்பயன்படுத்தும் போது அது கருத்தாக மலருகிறது. இயற்கையின் ஆற்றலையும் தன்மையையும் பார்க்கிறான். பார்த்ததை மனதிலும், மற்றச் சாதனங்களிலும் பதியவைத்துக்கொள்கிறான். பிறகு அதுபற்றி ஆராய்ச்சி செய்கிறான். பின்பு அதனின்று ஒன்றைக் கண்டுபிடிக்கிறான். கண்டுபிடித்ததை வாழ்க்கையில் பயன்படுத்திக்கொள்கிறான். எதையும் பார்க்கிறான், பதியவைக்கிறான்; ஆராய்கிறான்; கண்டுபிடிக்கிறான். பயன்படுத்துகிறான். இந்த முறையிலே பல்வேறு கருத்துக்களும் உருவாகின்றன. ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு நடந்து சென்று கொண்டிருந்த மனிதன், படிப்படியாக பலவித சாதனங்களைக் கண்டுபிடித்து இன்று மணி ஒன்றுக்கு 730 மைல் விரைவில் செல்லக்கூடிய வானவூர்தியில் செல்லுகிறான். குகைகளிலும், மரப்பொந்துகளிலும் புதர்களிலும் வாழ்ந்து வந்தவன் இன்று மாடமாளிகை, கூட கோபுரங்களில் வாழக் கற்றுக்கொண்டிருக்கிறான், பச்சை மாமிசத்தைப் புசித்து வந்தவன் இன்று பக்குவப்படுத்தி சத்தெடுத்து உண்ணும் நிலைமைக்கு வளர்ந்துள்ளான். இத்தகையவளர்ச்சிகளுக்கு அடிப்படைக் காரணங்களாக விளங்குபவை மூன்றாகும். மனிதன், தன் உழைப்பினைக் குறைத்துக்கொள்ளவும், பயனைப் பெருக்கிக் கொள்ளவும், இன்பத்தை வளர்த்துக் கொள்ளவும் எண்ணுகிறான். குறைந்த உழைப்பு, மிக்க பயன், நிறைந்த இன்பம், இவையே மனித வாழ்க்கையின் குறிக்கோள்களாக விளங்குகின்றன.

மனித வாழ்க்கையின் தேவைகளைப் பூர்த்தி செய்து தரும் அளவுக்கு அறிவு படிப்படியாக வளர்ந்து வந்துள்ளது; அது இனியும் வளர்ந்து வரும். அறிவு வளர வளர கருத்துக்களும் வளர்ந்துவந்துள்ளன. அறிவு தன் சுவடுகளைக்காலந்தோறும் பதியவைத்துவிட்டு முன்னேறி வந்து கொண்டேயிருக்கிறது. அறிவோடொத்த கருத்து வளர்ந்த அளவுக்கு, மக்களுடைய உள்ளமும் வளர்ந்து வந்திருக்கிறதா என்றால், இல்லை! அறிவு வளர்ந்த பாதையில் சிலர் கி. பி. பத்தாவது நூற்றாண்டிலேயே நிற்கிறார்கள், சிலர் ஐந்தாவது நூற்றாண்டை விட்டு அகலவில்லை, சிலர் இரண்டாவது நூற்றாண்டிலேயே தங்கியிருக்கிறார்கள், மற்றுஞ் சிலர் கி. மு. இரண்டாம் நூற்றாண்டிலேயே வாழ்கிறார்கள். இருபதாம் நூற்றாண்டில் வாழத் தகுந்தவர்களாக எல்லோரும் ஒருசேரக் காணப்படவில்லை.

ஆகவே கருத்து ஒன்று தோன்றி, அதனினும் சீரிய கருத்து ஒன்று தோன்றாத வரையில், முன்னைய கருத்துப் புதுமைக் கருத்தாகவே கருதப்படும். சீரிய கருத்து ஒன்று தோன்றிவிடுமாயின், தோன்றிய சீரிய கருத்து புதுமையுடையதாகவும், முன்னையது பழைமையுடையதாகவும் கருதப்படும். சீரிய கருத்துத்தோன்றி மீண்டும் பழைய கருத்துக்கே மனிதனுடைய உள்ளமோ, சொல்லோ, செயலோ செல்லுமாயின் அப்போது அவன் கீழ்நோக்கிச் செல்லுகிறான் என்றுகொள்ளவேண்டும். ஆகவே காலத்தைக் கணக்கிடாமல், கருத்தை மட்டும் கணக்கிட்டு, சீரிய கருத்துக்களையே புதுமையாகவும், சீர்மைகுன்றியவைகளைப் பழைமையாகவும் கருதும் முறையில்தான் இலக்கியத்தில் பழைமையையும் புதுமையையும் காணச் சொல்லுகிறேன். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட கருத்து சீரியதாக இருந்து, அதற்குப் பின் ஏற்பட்ட கருத்து அதனினும் சீர்மை குன்றியதாகக் காணப்பட்டால், முன்னையதைப் புதுமைக் கருத்தாகவும் பின்னையதைப் பழைமைக் கருத்தாகவும் கொள்ளவேண்டும். இந்த முறையில் கணிக்கப்படும் புதுமைக் கருத்துக்களை எந்த நாடு கையாண்டு வருகிறதோ கையாள முனைந்து நிற்கிறதோ அது உலகில் சிறந்தவொரு நாடாக விளங்கக் காண்கிறோம்.

தமிழகத்தின் வாழ்வை உருவாக்குவதில், தமிழ் இலக்கியங்கள் எந்த அளவுக்குப் பங்கு பெற்றுள்ளன என்பதை அறியவேண்டும். அவற்றின்கண் செறிந்து காணப்படும் புதுமை — பழைமைக் கருத்துக்கள் மக்களின் உள்ளத்தை உருவாக்கி வந்த தன்மையை, எதிர்கால சிந்தனைச் சிற்பிகளாகவும், நாட்டின் நடுநாயகங்களாகவும் விளங்கப் போகும் மாணவர்கள் சற்று உணர்ந்து பார்க்க வேண்டியது இன்றியமையாததாகும்.

இலக்கியம், காலத்தையும் அதில் தவழும் கருத்துக்களையும் படம் பிடித்துக் காட்டும் கண்ணாடியாகவும் இருந்துவருகிறது. இலக்கியக் கண்ணாடி மூலமாக அவ்வக் காலங்களின் இயல்புகளையும், மக்கள் வாழ்ந்த வாழ்க்கை முறையையும், அவர்கள் உள்ளத்திலே ஊசலாடிக்கொண்டிருந்த கருத்துக்களையும் அறிய வழியேற்படுகிறது. தமிழகத்தின் வாழ்வு வளர்ந்து வந்தவிதத்தை அறிய வேண்டுமாயின், மாணவர்கள் தமிழிலக்கியங்களைப் புரட்டிப் பார்க்க வேண்டும். தமிழகம் சீரிய புதுமைக் கருத்துக்களைப் படிப்படியாக ஏற்றுக்கொண்டு மேலோங்கியே வந்திருக்கிறதா அல்லது சீர்மையினின்றும் சற்று இழிந்து காணப்படும் பழைமைக் கருத்துக்களை ஏற்றுக் கொண்டு பின்னோக்கிச் சென்றதா, அல்லது மாறிமாறி வளர்ந்தும் தாழ்ந்தும் வந்ததா, அல்லது தேங்கியே நின்றதா என்பதைஉணர நம் தமிழிலக்கியங்களைக் காலவரிசையில் வரிசைப்படுத்தி, கருத்துக்கள் தவழ்ந்த போக்கினைக் காணவேண்டும்.

தமிழிலக்கியங்களிலே தொன்மை வாய்ந்ததாகவும், இருப்பவைகளிலே முதன்மை வாய்ந்ததாகவும் கருதப்படுவது தொல்காப்பியமாகும். தொல்காப்பியம் இற்றைக்குச் சற்றேறக் குறைய இராயிரத்தைந்நூறு அல்லது மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னர் எழுந்ததாக ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். அத்துணை தொன்மைவாய்ந்த தொல்காப்பியத்தையும், அதற்கு அடுத்துக் கருதக்கூடிய திருக்குறளையும், சங்ககால இலக்கியங்களான ஐங்குறுநூற்றையும், பதிற்றுப்பத்தையும், பரிபாடலையும், அகநானூற்றையும், புறநானூற்றையும், பத்துப்பாட்டையும், கலித்தொகையையும், நற்றிணையையும், குறுந்தொகையையும், கி. பி. 2-ம் நூற்றாண்டில் எழுந்த சிலப்பதிகாரத்தையும் மணிமேகலையையும், மறைமலையடிகளார் ஆராய்ச்சிப் படி கி. பி. 3-ம் நூற்றாண்டில் எழுந்த திருவாசகத்தையும், 4-ம் நூற்றாண்டில் எழுந்த ஆசாரக் கோவையையும், 5-ம் நூற்றாண்டிலெழுந்த பெருங்கதையையும், 6-ம் நூற்றாண்டிலெழுந்த கல்லாடத்தையும், 7-8-ம் நூற்றாண்டுகளிலெழுந்த அப்பர்,

சம்பந்தரர் தேவாரங்களையும், 9-ம் நூற்றாண்டிலெழுந்த சுந்தரர் தேவாரத்தையும், ஆழ்வார்கள் பிரபந்தங்களையும், 10-ம் நூற்றாண்டிலெழுந்த சீவக சிந்தாமணியையும், 11-ம் நூற்றாண்டிலெழுந்த பெரியபுராணத்தையும், 12-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றிய கந்தபுராணத்தையும், பிற்பகுதியில் தோன்றிய கம்பராமாயணத்தையும், 13-ம் நூற்றாண்டில் தோன்றிய சிவஞானபோதத்தையும், 14-ம் நூற்றாண்டிலெழுந்த தலபுராணங்களையும், 15-ம் நூற்றாண்டிலெழுந்த வில்லிபாரதத்தையும், அருணகிரி திருப்புகழையும், 16-ம் நூற்றாண்டிலெழுந்த திருவிளையாடற் புராணத்தையும், 17-ம் நூற்றாண்டிலெழுந்த சீராபுராணத்தையும், தேம்பாவணியையும், 18-ம் நூற்றாண்டிலெழுந்த தாயுமானவர் பாடல்களையும், 19-ம் நூற்றாண்டில் தோன்றிய இராமலிங்கர் பாடல்களையும், 20-ம் நூற்றாண்டின் துவக்கத்தில் தோன்றிய பாரதியாரின் பாடல்களையும், இப்பொழுது வெற்றிவலம்வரும் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் பாடல்களையும் வரிசையாகவைத்து ஆய்ந்து பார்ப்பீர்களானால் தமிழகம் வளர்ந்து வந்த போக்குத்தெள்ளிதின் புலப்படும்.

கி. பி. முதல், இரண்டு நூற்றாண்டுகள் வரையில் தமிழகம் ஒவ்வொரு துறையிலும் மேலாங்கி வளர்ந்து வந்த விதத்தையும், அறிவுத்துறையிலே அந்த அளவோடு ஒரு தேக்க நிலை ஏற்பட்டதையும், அதற்குப் பின்னால் நிலைகுலைந்த தன்மை நீடிக்கத் தொடங்கியதையும் காணலாகும். ஆங்கிலேயர்கள் தேம்ஸ் நதிக்கரையில் மீன்பிடித்து, காட்டுவாழ்க்கையில் அநாகரிகமாய் வாழ்ந்துவந்த அந்த நாட்களில், தமிழகத்தார் நாகரிகத்தின் நல்ல நிலையில் இருந்தார்கள் என்று ஆராய்ச்சியால் அறிகிறோம். தமிழர்கள் அரசு அமைக்கக் கற்றுக்கொண்டிருந்தார்கள்; கோட்டை கொத்தளங்கள் சமைக்கத் தெரிந்துகொண்டிருந்தார்கள்; வில், வாள், வேல் ஏந்தத்திறன் படைத்திருந்தார்கள்; நால்வகைப் படைகளை நடத்திச்செல்லும் ஆற்றல் அவர்களிடம் விளங்கியது; அவர்களின் வீரம் இமயம் சென்றுமுட்டியது; வாணிகம் யவனத்திற்கும், சீனத்திற்கும், காழகத்திற்கும் கடாரத்திற்கும், ஈழத்திற்கும் சென்று சீர்பெற்றிருந்தது; கொந்தளிக்கும் கடலிலே கலங்களை விட்டுச்சென்றார்கள்; பட்டினும் பருத்தியினும் ஆனஆணிகள் மட்டுமேயன்றி எலிமயிரினால் கம்மளங்கள் நெய்யக் கற்றுக்கொண்டிருந்தார்கள், பண்டகசாலைகள் அமைத்திருந்தார்கள்; உலகிலே உயர்ந்து விளங்கினார்கள். இவ்வளவு நல்ல நிலை தொடர்ந்து வளர்ந்துவந்ததா என்றால், இல்லை! இடையிலே தேக்கம் ஏற்பட்டு விட்டது. வளர்ச்சி ஓரளவோடு வந்து நின்று விட்டது. அதேகாலத்தில் காட்டுமிராண்டிகளாக வாழ்ந்த ஐரோப்பியர் அறிவுத்துறையிலே வளர்ச்சி பெற ஆரம்பித்து, இன்று நாகரிகத்தின் உச்சநிலையடைந்து இன்பவாழ்வு வாழ்கிறார்கள். தமிழர்கள் சக்கிமுக்கிக் கற்களைத் தட்டி நெருப்புபெற்ற நிலையிருந்து வளர்ந்து, எண்ணெயைப்பெய்து திரியைவிட்டு விளக்கொளி பெறும் நிலையை அடைந்தார்கள். ஒளியைப் பெறும் விதத்திலே எடுத்துக்கொண்ட அறிவுமுயற்சி அந்த அளவோடு நின்றுவிட்டது. போக்குவரவு சாதனத்தில் குதிரைகள் பூட்டிய தேரையும், இரட்டைமாட்டு வண்டியையும் கண்டுபிடித்த அளவோடு முயற்சி நின்றுவிட்டது. அறிவு வளர்ச்சியில் ஒருவித தேக்கநிலை நாட்டில்ஏற்பட்டு விட்டது என்பதை நன்குஉணரலாம்.

தேக்கநிலை ஏற்பட்டதற்குக் காரணம் என்ன என்று படிப்படியாகத் தோன்றிவந்த கருத்துக்களை ஆராயும்போது, மக்களின் எண்ணம் வேறுவகையில் திருப்பப்பட்டதே யாகும் என்பதுபுலப்படும். வாழ்வை வளம்படுத்தும்முயற்சியிலே சென்று கொண்டிருந்த மக்களின் எண்ணம், அதனை அலட்சியப்படுத்தும் வழியில் மதக்கருத்துக்களால் திருப்பிவிடப்பட்டது. உலகம் உண்டு, வாழ்வு உண்டு, அதிலே இன்பம் உண்டு, என்று கொண்டிருந்த மக்களின்உள்ளங்களிலே, உலகம் பொய், வாழ்வு பொய், யாவும் பொய், நீங்கள்பொய், நான் பொய், தலைவர் பொய், இப்பல் கலைக்கழகம் பொய், என் எதிரிலே நிற்கும் ஒலிபெருக்கி பொய், எல்லாம் மாயை என்று கருதும்படியான எண்ணங்கள் புகுத்தப்பட்டன. இவ்வுலக வாழ்வை மறந்து வேறோர் உலகத்திற்குத் தங்களைத் தயார் செய்து கொள்பவர்களாகக் காணப்பட்டார்கள். மேலும் மேலும் அறியவேண்டும் என்ற முயற்சி நின்றது! மதம் சொல்லும் எல்லாவற்றையும் நம்பும் பழக்கம் ஏற்பட்டது. அறிதல் தடை செய்யப்பட்டது; நம்பிக்கை வளர்க்கப்பட்டது. இயற்கைச் சக்திகளை வேலையாட்களாகக் கொள்ளாமல், அவற்றிற்கு அஞ்சிவாழும் தன்மையராக மக்கள் மாறினர். ஆகவேதான் அறிவு வளர்ச்சியில் தேக்கம் ஏற்பட்டது என்கிறோம்.

வில், வாள், வேல், நால்வகைப் படைகளைமட்டும் அறிந்தவர்களிடத்தில் வாயுவாஸ்திர, வருணாஸ்திர, அக்னியாஸ்திர, கற்பனை ஆயுதங்கள் குடிபுகுந்தன. முகத்திலும் மார்பிலும் விழுப்புண் ஏற்றமக்கள், பல்லியின் சத்தத்திற்கு நடுங்கும் கோழைகளாயினர். யமகண்டம், குளிகை காலம், இராகுகாலம் ஆகியவற்றைக் கண்டு அஞ்சும் கோழைகளாயினர். கற்பனை உலகில் காட்டப்பட்ட அனைத்தையும் நம்பி அவற்றிற்காக வாழ்வைப் பலி கொடுத்தனர். வாழ்வை வளமாக்கும் கருத்துக்கள் மறைந்து வாழ்வை வெறுத்து மற்றோர் உலகத்திற்குச் செல்லவேண்டிவழி யமைக்கும் மதக்கருத்துக்கள், மக்கள் உள்ளத்தில்பதியும் வண்ணம் இலக்கியங்களால் எடுத்தோதப்பட்டன. தேவாரம், திருவாசகம், சிந்தாமணி, கந்தபுராணம், பெரியபுராணம் கம்பராமாயணம், பட்டினத்தார் பாடல்போன்ற இடைக்கால நூல்கள் தத்தம் மதக்கருத்துக்களையே மிகவாக எடுத்துக்கூறின. அவைகள் இசையோடு குழைத்து மக்களுக்கு ஊட்டப்பட்டன. மதஉணர்வு மிஞ்சி நின்றது.

சங்ககாலத்தில் கடவுளைப்பற்றிய எண்ணமும், கருத்துக்களும் நில வின என்றாலும், அவைகள்வாழ்வை மறக்கடிக்கும்வகையில் ஆதிக்கம் பெறவில்லை. சங்ககாலச் செய்யுட்கள் காதல் வாழ்வின் மேம்பாட்டை விளக்கி நின்றன. முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் என்ற ஐவகை நில ஒழுக்கங்களைக் கற்பித்தன; அரசர்களின் வீரத்தைப் பாராட்டின. வீரச்செயல்களைப் போற்றின; புலவர் பெருமக்களின் அருந்திறல்களை வியந்தன; பட்டினப் பாலைபோன்றவைகளில் கூறப்பட்டிருப்பனபோன்ற மக்களின் அன்றாட வாழ்வை விளக்கிக் காட்டின. அந்த நிலை தொடர்ந்து காலத்திற்கேற்ற கருத்தோடு முன்னேக்கி வளர்ந்து வந்திருக்குமேயானால், தமிழகம்,

(12-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

ஞாயிறு] 20—3—49 [காஞ்சி

வெட்கமா? தூக்கமா? அச்சமா?

“மஹாநதிக்”கரையை அடுத்துள்ள இடத்திலே, ஒரிசாமாகாண சர்க்கார், நிலக்கரியிலிருந்து பெட்ரோல் தயாரிக்கும் தொழிற்சாலையும், யந்திரக்கருவிகள் தயாரிக்கும் தொழிற்சாலையும், உழவுக்கான விஞ்ஞானக்கருவி தயாரிக்கும் தொழிற்சாலையும், துவக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள். இந்தத் தொழிற்சாலைகளை அமைப்பதற்கான, உதவிகளையும், யோசனைகளையும், ஒரிசா சர்க்கார், பிரிட்டிஷ், அமெரிக்கா, ஜெர்மன், தொழிற்சாலை நிபுணர்களிடமிருந்து பெறுகிறார்கள், என்று ஒரு செய்தி பத்திரிகைகளில் வெளிவந்திருக்கிறது.

ஆனால் அதேநேரத்தில், சென்னை மாகாணத்தின் இயற்கைச் சக்திகளை விஞ்ஞான முறைப்படி பயன்படுத்தி, பொதுச் செல்வத்தை, வளர்க்கும் திட்டம், ஏதும் துவக்கப்படவில்லை.

சேலம் மாவட்டத்திலே இரும்புச் சுரங்கம் இருக்கிறது, தென்ஆற்காடு மாவட்டத்திலே, பழுப்புநிற நிலக்கரிச் சுரங்கம் இருக்கிறது, என்ற அறிக்கைகள், வெளியாகி, ஆண்டு இரண்டுக்கு மேலாகின்றன.

அந்தச் சுரங்கங்கள், வளமுள்ளவை, கிடைக்கக்கூடிய பொருளும், தரமானவை, என்று! கூறப்படுகின்றது.

இந்த இயற்கைச் சக்தியைப்பயன்படுத்திப்புதிய, பெரிய தொழிற்சாலைகளைத் துவக்கினால், மாகாணத்தின் செல்வம் வளரும், என்று நம்பிக்கையூட்டப்படுகிறது.

இதற்கான திட்டமே தயாராக இருப்பதாக, ஆசை யூட்டப்படுகிறது.

இதுபற்றி, டில்லி சர்க்காருக்குத் தகவல் தரப்பட்டிருக்கிறது, யோசனை கோரப்பட்டிருக்கிறது, அனுமதி எதிர் பார்க்கப்படுகிறது, என்றெல்லாம் அமைச்சர்கள் அடிக்கடி பேசி ஆவலைக்கிளறியபடி உள்ளனர்.

இனி, மேலும் மேலும் வரிபோடுவதன்மூலம், சர்க்கார், வளர்ந்து கொண்டுவரும் செலவைச் சமாளித்துப், பொதுமக்களுக்கு நலன்தரும் பணிபுரிய முடியாது, புதுச்செல்வம் வளர வழி கண்டாகவேண்டும், வாழ்க்கைத்தரம் உயர்ந்தாக வேண்டும், அதற்கு தொழில்வளம் பெருக வேண்டும், என்று அறிவுரை வழங்கப்படுகிறது, தாராளமாக.

திராவிடநாடு, வடநாடு, என்று பேசுவது, ‘விஷங்கலந்தது’ என்று, நியாயம் பேசும் பெரிய மனிதர்கள் கூட, தென்னாட்டிலே போதுமான அளவு தொழில் வளர்ச்சி இல்லை என்பதை உணர்ந்து, பேசவும்செய்கிறார்கள்.

இயந்திரத் தொழில் துறை நிபுணர்களான, சர். விஸ்வேஸ்வரய்யா போன்றவர்கள், இந்தியாவிலே, பெரிய தொழிற்சாலைகள் ஒரேபகுதியிலே, குவிந்திருப்பது, சரியல்ல என்பதையும், பொருளாதார நிலை, செம்மைப்பட வேண்டுமானால், தொழிற்சாலைகள், நாடு முழுவதும் பரவி இருக்கவேண்டும் என்பதையும், எனவே, தென்னாட்டிலே ஒரு புதிய தொழில் திட்டம் தயாரிக்கப்படவேண்டும் என்பதையும், வற்புறுத்தி வருகிறார்கள்.

எனினும், இதுவரையிலே, இயற்கைச்சக்தி தூங்கியபடிதான் இருக்கிறது — புதிய பெரிய தொழிற்சாலைகள் துவக்கப்படவில்லை.

இரும்பு, நிலக்கரி சுரங்கங்களைப் பயன்படுத்தி, இரும்புத் தொழிற்சாலையை, இந்த மாகாணத்தில் துவக்கவேண்டுமென்று, சென்னை சர்க்கார், கோரியதற்கு, டில்லியிலிருந்து இன்னமும் சாதகமான பதில் கிடைக்கவில்லை. ஏன்?

திராவிடநாடு—என்று சொல்வது தீது, என்று கருதும், திவ்யபுருஷர்களைக் கேட்கிறோம், இந்த நிலை, சென்னை மாகாணத்துக்கு இருப்பது சரியா, முறையா, வாழ்வை வளமாக்குமா?

என்ன பரிகாரம் கண்டுபிடிக்க உத்தேசித்திருக்கிறார்கள்! ஏன், கண்மூடிமௌனியாகி உள்ளனர்?

ஒரிசா போன்ற சிறுமாகாணங்கள் கூடப் பெரிய தொழிற்சாலைத்திட்டங்களைத்துவக்கத் திறனும் துணிவும் கொண்டு, டில்லி சர்க்காரின் அனுமதியையும் உதவியையும் பெற முடிந்தபோது, சென்னைக்கு ஏன், சீரழிவு இருக்கிறது! மாற்றாந்தாயிடம் வளரும் மகவாக இருப்பானேன்? இந்தநிலை மாற, என்னவழி? திராவிடர் கழகத்தாரின் திட்டத்தைத் தான், தீது என்று கூறுகிறார்கள்—சரி—விளங்கும்போது விளங்கட்டும்—இப்போது, இவர்கள், இந்த நிலைமையைப் போக்க, என்ன வழி கண்டுபிடிக்கப் போகிறார்கள்! வாய் திறவாத காரணம் என்ன? வெட்கமா! தூக்கமா? அச்சமா?

சென்னை மாகாணம், வெறும் விவசாயத்தையும், சிறு குடிசைத் தொழில்களையும், மட்டும் கொண்ட, பட்டிக்காடு ஆகிவிடட்டும்—வடநாடு, சீமையாகட்டும், என்று கூறிவிடுகிறார்களா?

சென்னையிலே, புதிய தொழில் வளத்துக்கான, வசதியே கிடையாது என்று எண்ணுகிறார்களா?

சென்னை மாகாணத்திலே, புதிய தொழிற்சாலைகள் துவக்குவது, வடநாட்டு, தொழில் துரைமார்களுக்குக் கோபமூட்டும், அவர்களின் போட்டியைச் சமாளிக்க முடியாது என்று பயப்படுகிறார்களா?

அல்லது இந்தப் பிரச்னையை வலியுறுத்தினால், விளக்கினால், பிறகு, திராவிடர்கழகப் பிரசாரத்துக்கும், தங்கள் பேச்சுக்கும் அதிக வித்யாசமில்லை என்று டில்லி கூறிவிடுமே என்று திகில்கொள்கிறார்களா?

தென்னாட்டுத்தொழிலபிவிருத்தி, வடநாட்டுத்தொழில் அபிவிருத்தி என்று பாகுபாடுபடுத்திப் பேசுகிறீரே, ஐயா!, இதேதான் நாங்கள், இவ்வளவு காலமாகப் பேசிவரும், திராவிடநாடு பிரச்னை, என்று எங்கே, நாங்கள் கூறுகிறோமோ, என்று வெட்கப்படுகிறார்களா!

அல்லது, டில்லியின் பிடி, மிகப் பலமாக இருக்கும் இப்போது, இந்தப்பிரச்னையைப் பேசுவது, ஆபத்து என்று எண்ணி, காலம் வரட்டும் என்று காத்துக்கொண்டிருக்கிறார்களா?

பணிந்துவிட்டார்களா? பதுங்கிக் கொண்டுள்ளனரா? பயமா? வெட்கமா? — இங்கு இரும்பையும் நிலக்கரியையும் தூங்க வைத்துவிட்டு, தரித்திரத்தை ஆடவிட்டுக் கொண்டிருக்கக் காரணம் என்ன?

★ கனவில் கீரதர் ★

ஆனந்தத் தாண்டவமாடிக் கொண்டிருந்த, பரமசிவனாரின், செவியில், நாரதரின் தம்பூரும் நந்தியின் மிருதங்கமும் ஒலித்த சப்தமும், பக்தகோடிகள், அரகரா—அற்புதம்—என்று பஜிக்கும் சப்தமும், "ஆனந்த நடனமாடினார்"—என்று பாடும் தேவமாதரின், கானமும் கேட்டுக்கொண்டிருந்த நிலையில் யாரோ விம்மி விம்மி அழும் சப்தமும் கேட்டது—ஐயன், ஆனந்தத் தாண்டவத்தை நிறுத்திவிட்டார்—யார் அழுகிறார்கள்—ஏன் இந்த விம்மும் குரல்?—என்று ஆச்சரியமடைந்தார்.

மானாட மழுவாட மங்கை சிவகாமி ஆட, ஆடிக்கொண்டிருந்த மகாதேவன், திடீரெனத் தமது தாண்டவத்தை நிறுத்திவிடக் கண்ட. தேவர்களும் பூதகணங்களும், நந்தியும் நாரதரும், பயந்தனர்—ஏன் என்று கேட்கவும் அஞ்சியவர்களாய், கைலையை விட்டு நழுவினர்.

கைலைநாதன், மீண்டும், விம்மும் சத்தம் தமது செவியில் வீழ்கிறதா, என்று உற்றுக் கேட்டார்—ஆம்—விம்மும் குரல் கேட்கிறது—பெண்குரல்! பெம்மான், திடுக்கிட்டுப் போனார்—குரல், தமக்குப் பழக்கமானதாகத் தெரியவே! சுற்றும் முற்றும் பார்த்தார்—மேலும் கீழும் பார்த்தார், ஒரு உருவமும் தென்படவில்லை—ஆனால் அழுகுரல் மட்டும் கேட்டது.

இதென்ன ஆச்சரியம் என்று கூறிய வண்ணம், உட்கார்ந்தார், புலித்தோல் ஆசனத்தின் மீது—சோகம் கொண்டு, கரத்தைச் சிரத்தருகே கொண்டு சென்றார்.—"போதும், உபசாரம்!" என்று கூறியபடி, கங்காதேவி, அவர் கரத்தைத் தள்ளிடவே, ஐயன், "ஓ ஹோ! மாதரசி! மறந்தே போனேன்! கங்காதேவி! கதறியது நீயா? காரணம் என்ன? எந்தக் கயவனால், என்ன கேடு நேரிட்டது, கூறு? மனக்கஷ்டமடைய உனக்கு என்ன காரணம் கிடைத்தது! உமையவளே, என் உடலிற் பாதி மட்டுமே பெற முடிந்தது—நீயோ, என் உச்சியிலே உறைவிடம் பெற்றாய்! உன்நிலை இவ்வளவு உன்னதமாக இருக்கும்போது, நீ உள்ளம் நொந்து கிடக்கக் காரணம் என்ன? உலகோர், உன் மகிமையைப் போற்றிப் புகழக் கேட்டுப் புளகாங்கித மடைவது முறையாயிருக்க, புனிதவதி! நீ புலம்பக் காரணம் என்ன?" என்று பரமசிவனார் பரிவுடன் கேட்கலானார்.

கங்கா தேவியார், கைலைவாசனின் ஜடாபாரத்தை விட்டுக் கீழேஇறங்கி வந்து, ஐயனின் அருகே அமர்ந்து கொண்டு, கண்களைத் துடைத்தபடியே பேசலானார்—கோபமும் சோகமும் கலந்த குரலில்.

"என்னை இந்த கதிக்கு ஆளாக விட்டு விட்டு நீர் ஆனந்தத் தாண்டவமாடுகிறீரோ? ஆண்களின் சுபாவமே இப்படித்தானே? அழுத கண்களுடன் ஆரணங்குகள் இருந்தபோதிலும் ஆடல் பாடலில், விருந்து வைபவத்தில் காலங் கழித்துவரும் கல்மனம் படைத்தவர்கள் தானே ஆண்கள்"

"கங்கா தேவி! மற்ற ஆடவர்களைப் போலவே என்னையும் எண்ணிக் கொண்டாயா? பெண் குலத்தைப் பழிக்கும் பேயன் அல்லவே நான். பெண்பாவாய்! ஏன் வீணாக மனதைக் குழப்பிக் கொள்கிறாய்? உன் மனக் கஷ்டத்திற்கு என்னதான் காரணம்? எந்தத் தீயவன் என்ன தீங்கிழைத்தான்? தேவி! தெரிவி இப்பொழுது! திரிபுரம் எரித்த எனக்கு அத்தீயவன் எம்மாத்திரம்."

"போதும் போதும் உங்கள் வீரப் பிரதாபம். யார் என்னை என்ன நிந்தித்தாலும் உமக்கென்ன. இவளுக்காகப் பரிந்துபேச யார் இருக்கிறார்கள் என்ற தைரியத்தில் யாராரோ என்னை இழித்தும் பழித்தும் பேசுகிறார்கள், என் கதி இப்படி இருக்கிறது, நீங்களோ ஆனந்தத் தாண்டவமாடுகிறீர்."

"அஹா, உன்னையா இழித்தும் பழித்தும்பேசினார்கள்? எங்கேஇருக்கிறது அந்த நாஸ்திகக் கும்பல்? கூப்பிடு ரிஷபத்தை! கொண்டு வா சூலாயுதத்தை! ஒருநொடியில் துவம்சம் செய்துவிட்டு வருகிறேன்."

"நாஸ்தீகக் கும்பல் என்னைப் பற்றி இழித்துப் பேசினால், நானே அவர்களைச் சம்ஹரித்து விட்டிருக்க மாட்டேனா!"

"அங்ஙனமாயின், ஆஸ்திகச் சிகாமணிகளா, உன்னை இழிவாகப் பேசினர்?"

"ஆமாம் – அதுதான், என் மனதைக் குழப்புகிறது."

"மாதர் திலகமே! என்ன கூறினர் – ஆஸ்திகராயிருந்தால் என்ன – நாஸ்தீகராயின் என்ன – உன்னை நிந்தித்தவர், எவராயினும், என் விரோதிகளே ஆகின்றனர். யார் அவர்கள், கூறு!"

"தங்கள் ஜடா முடியிலே தங்கும் தவப் பயன் பெற்ற, எனக்குள்ள மகிமை, இந்த ஈரேழு பதினாலு லோகத்திலும், போற்றப்பட்டு வருவதாகத்தானே, தாங்கள் கூறுகிறீர்கள் – தேவரும் கூறுகின்றனர்..."

"அதிலென்ன சந்தேகம்! மாந்தரும், ஒப்புக்கொண்ட உண்மையல்லவா அது. உன் பெருமையை அறியாதார் யார் உளர்? உன் புனிதத் தன்மையைப் புகழாதார் யார்? பாசுரங்கள் பல உள்ளன, உன் பெருமையைப் பாராட்ட."

"பழங் கதைகள் கூடத்தான் உள்ளன – பகீரதன் என்னைக் கொண்டு வரச் செய்த முயற்சி, என்னால் ஏற்பட்ட அற்புதம் ஆகியவைகளைப் பற்றி......"

"ஆமாம் – சகல பாபங்களையும் போக்கிக்கொள்ள, கங்கையில் ஒரு முறை தலை முழுகினால் போதும். பாபம் கரைந்து போகும் – புண்யம் வந்து சேரும் — சர்வரோகமும் தீர்ந்து போகும் — சௌபாக்யம் வந்து சேரும், என்று உன் பெருமையைப் பாரோர் புகழத்தானே செய்கிறார்கள். பரத கண்டத்து மக்கள், எந்தக் கோடியில் உள்ளவர்களாயினும், உன்னைத் தரிசிக்க வருகிறார்களே! கங்கா தீர்த்தம், மகா மகத்துவம் வாய்ந்தது என்று கூறுவார்களே! இதிலே, என்ன சந்தேகம்?"

"இவ்வளவு மகிமையும், பொய்—கங்கா தீர்த்தம், புனிதமானதல்ல, கங்கையிலே தலை மூழ்கினால், பாபம் ஒழிந்துபோகும், என்று கூறுவது தவறு, என்று கூறுகிறார்கள். என் மகிமையைப் பற்றி எவ்வளவோ சுவடிகள் இருந்து என்ன பயன்?

கங்கா தீர்த்தத்துக்கு, 'சகல ரோகங்களையும்'' தீர்த்துவிடும்சக்திகூட இல்லை, என்று கூறிவிட்டார்கள்.''

"ஆஹா! இவ்வளவு துணிவுடன் பேசினரா......"

"ஏசினர், என்றுதானேபொருள்!"

"ஆமாம் — உன் மகிமையை மறுப்பவர், மாபாவிகளே! என்ன கூறினர்?"

"அவர்கள், ஆராய்ச்சி செய்து பார்த்தார்களாம்—பாமரர் நம்புவது போல, கங்கா தீர்த்தத்திலே, ஒரு விதமான மகிமையும் கிடையாதாம். கங்கையிலே நீராடினால், நோய்கள் தீர்ந்துபோகும், ஆரோக்கியம் வரும் என்று கூறுவது கூட, ஆராய்ச்சி செய்துபார்த்ததில், உண்மை அல்ல என்று தெரிந்துவிட்டதாம்"

"உன் மகிமையை, புனிதத் தன்மையைமறுப்பதுமட்டுமல்ல, மாபாவிகள்! நீ, உற்பத்தியாகும் இடம், உன்னதமான இமயம், என்பதையும் மறந்து, கேவலம், நோய்களைத் தீர்க்கும் அளவுக்குக் கூட உனக்கு வல்லமை இல்லை என்று கூறிவிட்டார்கள்."

"ஆமாம்—அது கேட்டது முதல், அடியாளுக்குத் துக்கம் தாங்கமுடியவில்லை. பலபேர் முன்னிலையில், பச்சையாக இதுபோல் பேசினர்—எவ்வளவுபேர் பரிகசித்தனரோ, தெரியவில்லை; எவ்வளவோ, யுகயுகமாக இருந்து வந்த பெருமையை ஒரு நொடியிலே, அழித்துவிட்டனர்."

"காலக்கோளாறு, இது, கங்கா! கங்கை என் ஜடாமுடியில் இருப்பவள் என்ற உண்மையைப் 'புராணம்' என்று, தள்ளிவிட்டாலும் கூட, கங்காதீர்த்தம், விசேஷமானது, மலையிலிருந்து கிளம்பி, மூலிகைகளின் சத்துகள் நிரம்பி, உடலுக்கு வலிவூட்டும் தன்மையைப் பெற்றிருக்கிறது, என்ற, முறையிலேயாவது, உன்னைப் பாராட்டக் கூடாதா? என்ன துணிவு! அந்த மகிமையும் கிடையாது என்று கூறிவிட்டனர்"

"ஆமாம்! இதோ பாருங்கள்!!"

* * *

இவ்விதம் உரையாடல், பரமசிவனுருக்கும் கங்காதேவியாருக்கும் நடைபெற்றது. கங்கா தேவியார், மார்ச் 17ந்தேதிய 'இந்து' இதழிலே இருந்து ஒரு செய்தியைப் படித்துக் காட்டினர்.

"கங்கைத்தீர்த்தத்துக்கு, சகலரோகங்களையும் குணமாக்கும் சக்தி இருப்பதாக பாமரர் நம்புவதை, விஞ்ஞானம் ஏற்றுக்கொள்ளவில்லை. அந்த ஆற்றின் தண்ணீரை, விஞ்ஞானமுறைப்படி, பரீட்சித்துப் பார்க்கப்பட்டது — 1917—1923-ம் ஆண்டுகளில். பீகார் மாகாண சுகாதார இலாக்கா இந்த ஆராய்ச்சியை நடத்திற்று, அந்த ஆராய்ச்சிக்குப் பிறகு, கங்காநதித்தண்ணீர் நோய்களைத் தீர்க்கும் சக்தி பெற்றதுஅல்லஎன்றஉண்மை விளங்கிற்று, என்று இன்று டில்லிபார்லிமெண்டில், சுகாதார மந்திரி, ராஜகுமாரி அம்ருத்கௌர் கூறினர்கள்.''

இதனைக் கேட்ட கைலைநாதன், கோபமடைந்தார் — பிறகு, ஓரளவு சாந்தி அடைந்து, சமர்த்தாகப் பேசக்கருதி, "கங்கா! ராஜகுமாரி சொன்னது கேட்டு, நாம் வீணாக வருத்தப்படக்கூடாது, அவர்சொன்னது, நோய் தீர்க்கும் சக்தி உனக்கு இல்லை என்றுதானே தவிர, பாபத்தைப்போக்கும் சக்தி கிடையாது என்று கூறவில்லையே — ஏன் அழவேண்டும், நீ!" என்றார்.

கங்காதேவி, முன்னினும் அதிகமான கோபங்கொண்டு, "பேஷ்! அழுகிற குழந்தைக்கு வாழைப்பழம் தருகிற முறையிலே பேசுகிறீர் போலும்! கேவலம், நோய்களைத் தீர்க்கவே, எனக்குச் சக்திகிடையாதுஎன்று கூறிவிட்டபிறகு, பாபத்தைப் போக்கும் மகிமை எனக்கு இருப்பதாக, யார், இனி நம்புவார்கள்? பாமரர்கள், பலகாலமாக நம்பி வந்ததை, பாழாய்ப்போன விஞ்ஞானம், அழித்துக்கொண்டு வருகிறது. நோய்போக்கும் நீரல்ல-பாபம் போக்கும் தீர்த்தமல்ல என்று, கூறத் துணிவு கொண்டுவிட்டனர்—பாராள வந்தவர்கள். ஆஸ்தீகர்கள் என்றே கூறிக் கொள்கின்றனர்."

"ஆமாம்—அரோராம்! ஜேசங்கர்!—என்றெல்லாம், பஜிக்கிறார்கள்..."

"பஜிக்கிறார்கள் — அதேபோது, என் மகிமை ஒரு கட்டுக்கதை, பாமரனின் மனமயக்கம், விஞ்ஞானத்தின் முன்பு நிலைக்கமுடியாதது, என்றும் நிந்திக்கிறார்கள்"

"ஆமாம்—சிக்கலாகத்தான் இருக்கிறது"

"அதுவும், டில்லி பார்லிமெண்டில், ஒரு மாது கூறுவதா, இப்படி! ...."

"பாரேன் அக்ரமத்தை! ஒரு ஆரணங்கு கூறுவதா?"

"மூதாட்டி — சீமாட்டியுங்கூட..."

"இப்படிப்பட்டவர்கள், மந்திரிகளாக உள்ளனர்."

"மந்திரிகள் இவ்விதம் பேசினால், மக்கள் எவ்விதம் பேசுவர்!"

"கேவலமாகத்தான் பேசுவர்! உன் கங்காதீர்த்தத்தின் யோக்யதை தெரியுமா! அதைப் பரிசுத்தமானது என்று பெருமையாகப் பேசிக்கொண்டாயே, மந்திரிவேலைபார்க்கும் அம்மையே கூறிவிட்டார்கள்; அப்படி ஒரு யோக்யதையும் கங்காதீர்த்தத்துக்குக் கிடையாது என்று. இந்த உண்மை தெரியாமல், கங்கா ஜலம், கங்கா ஜலம், என்று நாம் இதுவரை காக்காய்க் கூச்சல் போட்டுக் கொண்டிருந்து விட்டோம், என்றெல்லாம் கேலியாகத்தான் பேசுவார்கள்."

"ஏன் வயிறு எரியாதா? மனம் பதறாதா?"

"ஆமாம்—ஆனால், ராட்சதப்பயல்களோ, நாஸ்திகக் கும்பலோ, இவ்விதம் உன்னைப்பற்றிப் பேசினால், ஒரு நொடியிலே துவம்சம் செய்துவிடுவேன்—பேசியிருப்பவர்கள், ஆஸ்திகர் — ஆராய்ச்சிக்காரர் — விஞ்ஞானி— என்று கூறுகிறாயே!"

"இருந்தால் என்ன! விஞ்ஞானத்தின்மீது போர் தொடுத்து, அதனை ஒழித்துவிடவேண்டும்" — என்று கங்காதேவியார், கூறிடவே, கைலைநாதன் செய்யத்தான் வேண்டும்— கங்கைக்குவந்த கதி, நாளைக்குக் கைலைக்கும் வரும். என்று கூறிக்கொண்டே, போர்க்கோலம் பூண்டு கொள்ளலானார்.

"விஞ்ஞானத்தின் மீதா படை எடுக்கப்போகிறீர்?" என்று கேட்டுக் கொண்டே கீரதர் வந்து சேர்ந்தார்.

ஆமாம்—என்றார் ஐயன்—அம்மையும் 'ஆம்' என்றார்.

"சிரமமான காரியமாயிற்றே! தாங்கள் ரிஷபவாகனம் ஏறிச்செல்லு முன்பு, விஞ்ஞானி விமான மேறிச் செல்வானே! சூலாயுதத்தை வீசுவதற்குக் குறி பார்க்கு முன்பு, விஞ்ஞானி, அணுகுண்டை வீசிவிடுவானே!—" என்று கீரதர் கூறினர்.

* * *

என்னடா தம்பீ! கீரதர்—கீரதர்— என்று கூவினாய்—என்று கேட்டுக் கொண்டே, என் அண்ணன் என்

னைத் தட்டி எழுப்பினார்: கண்டது கனவு என்று அறிந்தேன்—பக்கத்திலே இருந்த பத்திரிகையிலே, கங்கைத் தீர்த்தம் கவைக்கு உதவாதது—மகத்துவம் இருப்பதாக மக்கள் நம்புகிறார்கள், ஆனால் அப்படி ஒன்றும் மகத்துவம் இல்லை—இது விஞ்ஞான ஆராய்ச்சியின் தீர்ப்பு, என்று, டில்லி பார்லிமெண்டில் சுகாதார மந்திரி ராஜகுமாரி அம்மையார், பேசிய 'செய்தி' காணப்பட்டது!

*

சென்னை சர்க்கார் உறுதி

12-ம் பக்கத் தொடர்ச்சி

இந்தவகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் சம்பந்தமாக 16-3-49-ல் சட்டசபையில் நடைபெற்ற விவாதத்தின் போது நிதிமந்திரி கோபால் ரெட்டி அவர்கள், உண்மையை மறைக்காமல், கண்ணியமாகவும், நேர்மைக்கும், நீதிக்கும் கட்டுப்பட்டுப் பேசியிருப்பது பாராட்டுதற்குரியதாகும்.

ஆனால், திராவிடர் கழகத்தாரைப் பற்றி அவர் அன்று பேசியவை, பொதுவாக உண்மை, நேர்மை, நீதி ஆகிய பண்புகளுக்கு இலக்கானவர்களால் வரவேற்கக் கூடியதாக இல்லை.

> "கருஞ்சட்டை இயக்கத்தார் பேச்சிலும் நடத்தையிலும் ஆபாசமாகவும், அவதூறாகவும் நடந்து வருகின்றனர்."

என்றும்,

> "அவர்கள் ஒழுங்காக நடக்குமாறு செய்யவேண்டியது சர்க்கார் வேலை."

என்றும் பேசியிருக்கிறார். திராவிடர் கழகத்தார் எப்போதுமே சட்டவரம்புக்கு உட்பட்டே நடப்பவர்கள் என்பது இதுவரை நடைபெற்ற ஒவ்வொரு நடவடிக்கைகளில் இருந்தும் நன்கு விளங்கும். ஒரு இனத்தின் உரிமைக்காகப் பணியாற்றுபவர்கள் சட்டவரம்பை மீறி எந்த நடவடிக்கையிலும் இறங்கமுடியாது, சட்டத்தை மீறுவது உரிமைபெறுவதற்குத் தடையாகும் என்பதைக் கருஞ்சட்டையினர் உணர்ந்திருப்பதாலேதான், அவர்கள் சட்டவரம்புக்கு உட்பட்டே, தங்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய உரிமைகளுக்காகப் போராடி வருகிறார்கள். இதுவரை திராவிடர் கழகம் சட்டவரம்பை மீறியதாகக் குற்றஞ் சாட்டப்படவும் இல்லை. என்றபோதிலும், திராவிடர் கழகத்தாரைப் பற்றி, நிதி மந்திரி தவறுதலான விஷயங்களைச் சேகரித்து வைத்துக்கொண்டு, பேசுவது அவருடைய தகுதிக்கும் பொறுப்புக்கும் ஏற்றதல்ல.

சட்டத்தை மீறினால் என்ன நேரிடும் என்பதை உணராதவர்களுக்கு உபதேசம் செய்வதுபோல், "திராவிடர் கழகத்தார் ஒழுங்காக நடக்குமாறு செய்யவேண்டியது சர்க்கார் வேலை" என்று பேசியிருப்பது பெரிதும் இரங்கத்தக்கதாகவே இருக்கிறது. சட்டத்தை மீறினால் ஏற்படும் பலாபலன்கள் எல்லாருக்கும் ஒரேவிதமாகத்தான் இருக்கும். இதற்காக ஒரு இயக்கத்தைக் குறிப்பிட்டு, அதிலும் சட்டவரம்புக்கு உட்பட்டு நடக்கும் திராவிடர் கழகத்தைக் குறிப்பிட்டு, நிதி மந்திரியார் இவ்விதம் ஏன் பேசினார் என்பதுதான் புரியவில்லை. திராவிடர் கழகத்தாரைப் பற்றி அவர் அறிந்திருப்பதும் — அறிவிக்கப்பட்டிருப்பதுமான தவறான செய்திகளை ஆதாரமாக வைத்துக்கொண்டு ஒரு பொறுப்புள்ள அமைச்சர் அவசரப்பட்டு இவ்விதம் பேசியிருக்கவே கூடாது. திராவிடர் கழகத்தாரின் அடக்கமும் பொறுமையும் அவற்றிற்கேற்ப அவர்கள் நடந்துகொள்ளும் முறையும் ஆளவந்தார்களால் உணரும் காலம்வரும் — வந்தே தீரும் என்ற நம்பிக்கை நமக்கிருப்பதாலேயே, அவர்கள் நம்முடைய நியாயமான உரிமைகளை உதாசீனம் செய்த போதிலும், பொதுநன்மைக்கான திட்டங்களை வகுக்கும் போதெல்லாம், நாம் நடுநின்று அவர்களைப் பாராட்டி வருகிறோம்.

இப்போது கொண்டுவரப்பட்டிருக்கும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறை, திராவிடர் கழகத்தின் திட்டமென்ற ஒரு காரணத்துக்காக மட்டும் நாம் அதை ஆதரிக்கவில்லையென்பதையும், அது, பொதுவாக இந்நாட்டிலுள்ள எல்லா இனத்தவர்க்கும் நன்மை பயக்கக்கூடியது என்பதற்காகவுமே நாம் அதனை ஆதரிக்கிறோம் என்பதை நம்மை வகுப்புவாதிகள் என்று கண்டிக்கும் 'கண்ணியர்கள்' உணரவேண்டுகிறோம்.

*

ஐ. நா.

ஐக்கியநாடுகள் சபைக்கு, இந்தியா 1948-ம் வருஷம், தன் சந்தாத் தொகையாக 37 இலட்சம் ரூபாய்க்கு மேல் கொடுத்திருக்கிறது. **1949-ம்** வருஷம் தரவேண்டிய தொகை **44** இலட்சத்துக்கு மேல் ஆகிறது. ஐக்யநாடுகள்சபை அலுவலகத்திலே, உத்யோகஸ்தர்கள் நியமிக்கப்படுவது, அந்தந்த நாடுகள் தரும் சந்தாத் தொகையின் அளவுக்குத் தக்கவிதமாக இருக்கவேண்டும் என்பது முறை. இதன்படி, இந்தியாவுக்கு 32 உத்யோகஸ்தானங்கள் கிடைத்திருக்கவேண்டும். ஆனால் தரப்பட்டிருப்பது, 19 ஸ்தானங்கள்தான்.

சி. என். ஏ. தீட்டிய

வாழ்க்கைப் புயல்!

மனிதனை

சூதாடி, கள்வன், நாடோடி.

என்றெல்லாம் மாற்றி விடுகிறது.

சமுதாயச் சூழ்நிலையை விளக்கும் சுவடி!

உங்கள் புத்தகசாலையில் இருக்க வேண்டும்!!

விலை அணா 0—12—0

தபால் செலவுடன் 0—13—0 முன்பணம் அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும். விற்பனையாளர்களுக்கு 25% கழிவு தரப்படும்.

பரிமளம் பதிப்பகம்

காஞ்சிபுரம்.

சென்னை சர்க்கார் உறுதி

வகுப்புவாரி நீதியை ஒழித்து விட்டு, கல்வித்துறையிலேயும், உத்யோக மண்டலத்திலேயும், ஏக போகம் அனுபவிக்க, எண்ணி, பார்ப்பனத் தலைவர்கள் இடைவிடாது செய்துவரும் முயற்சி அனைவரும் அறிந்ததே.

பார்ப்பனப் பிரமுகர், என்ன சமயமாக இருந்தபோதிலும், எதைப்பற்றிப் பேசுகிறதாக இருப்பினும், எப்படியாவது, இந்தப் பிரச்னையைப் பற்றிப் பேசாமலிரார்!

திறமை கெடுகிறதாம்! தேசம் நாசமாகிறதாம்! வகுப்புவாரி முறையை ஒழித்தாக வேண்டுமாம்!

ஆகமத்தைப் பற்றிப் பேசுவதானாலும் சரி, அணுகுண்டைப் பற்றிப் பேசுவதானாலும் சரியே, எப்படியாவது, இந்தப் பிரச்னையைப் பற்றிப் பேசியே தீருவர்.

பிரம்மஞான சங்கத்தின் பேரால் கூடினாலும் சரி, பிராமண சேவா சங்கத்தின் பேரால் கூடினாலும் சரியே, வகுப்புவாரி முறை ஒழியவேண்டும் என்று ஒரு தீர்மானத்தை நிச்சயமாக நிறைவேற்றுவர்.

'இந்து'வும், சமயம் கிடைக்கும் போதெல்லாம், இதுபற்றி, தீப்பொறி பறக்க எழுதாமலிராது.

திராவிடர் கழகத்தைத் தூற்றும் பணிபுரியும் அதே சமயத்திலே, காமராஜர், "பிராமணர்கள் இன்னும் ஒரு இருபது வருஷ காலத்துக்கு எந்த உத்யோகத்துக்கும் போவதில்லை, என்று தீர்மானிக்கவேண்டும்" என்று, யோசனை கூறினார்:

ஒரு பார்ப்பனப் பிரமுகராவது, இந்த யோசனையை ஏற்றுக்கொண்டு, பேசமுன் வரவில்லை.

என்ன பாடுபட்டாகிலும். வகுப்புவாரி முறையை ஒழித்தாகவேண்டும் என்று, வெறிபிடித்து அலைகிறார்கள்.

இதற்கு டில்லி சர்க்காரின் ஆதரவு கிடைத்துவிட்டது.

உத்யோகங்களுக்கு மனுச் செய்யும்போது, ஜாதிப் பட்டத்தைக் குறிக்கக் கூடாது என்று இந்திய சர்க்கார் கூறுகிறது. புளகாங்கிதமடைந்து பார்ப்பனப் பிரமுகர்கள், இந்தப்புனித மார்க்கத்தை, சென்னை சர்க்காரும், கட்டாயமாக, பின்பற்ற வேண்டுமென்று, யோசனை கூறுகிறார்கள். ஆனால், சென்னை சர்க்காரோ, இவ்விஷயத்திலே, உறுதி தளராமல், நீதியுடன் நடந்தே தீருவது என்று இருக்கிறது.

"சென்னை சர்க்கார், உத்யோகங்களுக்கு மனுச்செய்வோர், தமது ஜாதிப் பட்டங்களை, மனுவில்குறிப்பிடக்கூடாது என்று இந்திய சர்க்கார் கூறும், யோசனையை ஏற்றுநடத்தப் பிரியப்படவில்லை.

ஜாதிபேதம் ஒழிக்கப்படவேண்டும் என்பதுதான் சென்னை சர்க்காரின் விருப்பம். ஆனால் இந்தத் தேவையான சீர்திருத்தம், உத்யோகத்துக்கு மனுச் செய்பவர்கள், தங்கள்ஜாதி, மதம், ஆகியவற்றினைக் குறிப்பிடாமலிருந்துவிடுவதால், வெற்றிபெற்றுவிடாது என்று சென்னை சர்க்கார், கருதுகிறது.

இந்தச் சீர்திருத்தம்படிப்படியாகவே' நடைமுறைக்குக் கொண்டுவரக்கூடியது' இன்றுள்ள, பேதங்கள் சூழ்ந்தநிலையில், திறமை ஒன்றை மட்டுமே கவனித்து, கல்லூரிகளில் இடமளிப்பதோ, உத்யோகங்களில் அமர்த்துவதோ, விரும்ப முடியாத செயலாகும். வகுப்புவாரிபிரதிநிதித்துவ முறையை நீக்குவதற்கான காலம் இதுவல்ல."

இது சென்னை சர்க்காரின்கருத்து என்று, 'இந்து,' இந்தத் திங்கள் 12-ந் தேதிய இதழில் எழுதியிருக்கிறது.

சென்னை சர்க்காரின் இந்த உறுதியைப் பாராட்டுகிறோம்.

ஆனால், இந்த உறுதியைக் குலைக்கும்விதமான, தாக்குதல் மேலிடத்திலிருந்து வருமானால், சென்னை சர்க்காரின் நிலையும், அதனை நடத்திச் செல்லும் கட்சியின் நிலையும் என்ன ஆகும் என்பது தெரியவில்லை.

(11-ம் பக்கம் பார்க்க)

பழமையும்—புதுமையும்

7-ம் பக்கத் தொடர்ச்சி

எந்நாட்டாரும் எட்டிப்பிடிக்க இயலாதபடி உயர்ந்து விளங்கியிருக்கும்.

"காயமே இதுபொய்யடா வெறும் காற்றடைத்த பையடா" "ஆதலால் இப்பிறவி வேண்டேன் அரங்கமா நகருளானே" "வாழ்வாவது மாயம் இதுமண்ணாவது திண்ணம்"என்பன போன்ற, வாழ்வை வளையவைக்கும் கருத்துக்கள் மக்கள் அகத்தினின்றும்அகற்றப்பட்டு, வாழ்வைச்செம்மையாக்கும் சீரிய அறிவிடம்பட்ட செவ்விய புதுமைக் கருத்துக்கள் புகுத்தப்படவேண்டும். அந்தஅரும் பணியைச் செய்யப் புலவர் மாணவர்களும், தமிழ் பயிலும் மாணவர்களும் முன்வரவேண்டும்.

அணியழகு, உவமையழகு சொற்செறிவு, பொருளாழம் ஆகியவை கண்டு இன்புற வேண்டாம் என்று யான் கூற வரவில்லை. அந்த அருமையான ஆயுதங்களின் மூலம் மேலும் மேலும் மூடநம்பிக்கை குருட்டுப் பழக்க வழக்கப் பாழ்பட்ட கருத்துக்களைப் புகுத்த வேண்டாம். ஆண்டவனைப் பற்றிப் பாடியுள்ள பாட்டுக்கள் போதும். அழுது பார்த்தோம், கெஞ்சிப் பார்த்தோம், கேட்டுப் பார்த்தோம். தொழுது பார்த்தோம், ஆடிப் பார்த்தோம், பாடிப் பார்த்தோம் நாட்டின் நிலை சீர்பெற்றபாடில்லை. இனி வாழ்க்கைக்குத் தேவையான கருத்துக்கள் இலக்கியத் தேனோடு குழைத்தூட்டப்பட வேண்டும். இந்தப் பணியை ஓரளவுக்குப் பாரதியார் துவக்கிவைத்தார்-பாரதிதாசன் முழுக்க முழுக்க காலத்திற்கேற்ற புதுமைக் கருத்துக்களைப் புகுத்திப் பல பாட்டுகள் பாடியுள்ளார். அவைகள் பாமர மக்களையும் பாட்டாளிகளையும், ஏழைகளையும், தொழிலாளர்களையும் தன் வயப் படுத்துவனவாக அமைந்துள்ளன. அவை வீழ்ச்சியுற்ற மக்களுக்கு எழுச்சியூட்டுகின்றன. இங்கு புலவர்-மாணவர்களாகக் கூடியுள்ள நீங்கள் நாட்டைச் சீர்திருத்தும் நல்ல பணியினை இலக்கியத்தின் மூலம் செய்ய முற்பட வேண்டும். பழைமைக் கருத்துக்களுக்கு வளையாமலும் நெளியாமலும் நின்று என்றும் புதுமையாகவே விளங்கும் புதுமைக் கருத்துக்களை—அவை எந்தக் காலமாயினும் சரி—அவைகளைத் தோண்டி எடுத்துப் பொன் மொழிக்குப் புதுமை ஏற்றி, எதிர்கால வாழ்வை வளமாக்கப் பாடுபட வேண்டும். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கூறுவது போல், "வீழ்ச்சியுறு தமிழகத்தில் எழுச்சி வேண்டும், விசை யொடிந்த தேகத்தில் வன்மை வேண்டும், சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமைதன்னை, தொகையாக எதிர் நிறுத்தித் தூள் தூளாக்கும், காழ்ச் சிந்தை மறச் செயல்கள் மிகவும் வேண்டும், கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும், கீழ்ச் செயல்களை விடவேண்டும்." இதுவே எனது வேண்டுகோள்.

ஆர்ப்பரிப்பு

4-ம் பக்கத் தொடர்ச்சி

மணி மொழிகளிலே, ஒரு வாசகத்தின் முன்பு இவர்களுடைய பேச்சு நிற்குமோ! என்று வீம்பு பேசிய நாட்களும் போய்விட்டன.

இந்த 'ஜனங்கள்' ஏன் இப்படி, கும்பல் கூடி, அந்தக் குதர்க்கவாதிகளின் பேச்சைக் கேட்கின்றனர்? — என்று அலட்சியமாகப் பேசிய நாட்களும் போய்விட்டன.

இப்போது, இதுகள் வளர்ந்துவிட்டன — இப்போது தக்க நடவடிக்கை எடுத்து அடக்காவிட்டால், இதுகள், பேராபத்தை உண்டாக்கிவிடும் — ஆகவே, ஆட்சியாளர்களே! ஆண்மையாளர்களே! அலட்சியமாக இருக்கவேண்டாம்! கிளம்புங்கள், கிளம்புங்கள்! அழியுங்கள், அழியுங்கள்! — என்று முறையிடும் காலம், பிறந்துவிட்டது.

மக்கள், எந்தக் கும்பலின் பேச்சுக்குச் செவி சாய்க்கவே மாட்டார்கள், சட்டை செய்யவே மாட்டார்கள் என்று இவர்களால் கூறப்பட்டதோ, அந்தக் கும்பலின், பேச்சு, எப்படி இருப்பதாக, இப்போது இவர்கள், கூறுகிறார்கள்! இதோ, 'இவர்களில் ஒருவர்' பாடும், அச்ச அகவலில் சிறு பகுதி.

"சென்ற வாரம் சென்னை நகரத்தில் கோமளீஸ்வரன் பேட்டையில் திராவிடர் கழகத்தார் ஒரு கூட்டம் நடத்தினர்கள். பஜார் தெருவில் மக்கள் குழுமியிருந்தார்கள். ஒலி பெருக்கி, ஒரு மைல் தூரம் கேட்குமாறு, கதறிக்கொண்டிருந்தது. வண்டிகள் போக முடியவில்லை. வெகுதூரத்தில் நின்றுகொண்டு திராவிடர் கழகத்தார் செய்யும் பிரசங்கத்தைச் சற்றுநேரம் கேட்க நேரிட்டது."

இதுகள் பேசுவதை இவர்கள் கூடக் கேட்க நேரிட்டுவிடுகிறது!!

காலம் இப்படி மாறிவிட்டது!

ஆதிக்க ஆசை, சுலபத்திலே, மடியுமா! முதலிலே, இதுகள்-கத்துதுகள்-விதண்டாவாதிகள்-குதர்க்கம் — நிரீஸ்வரவாதம் — நாசகாலிகள் — என்று சொன்னால் போதும், என்றுதான், இந்த இவர்கள் எண்ணினார்கள்! இப்போதோ, இதுகள் போடுகிற போடு இவர்களின் ஆதிக்கத்தின் அடிப்படையையே ஆட்டுவிக்கிறது — எனவே இதுகளிடம் இவர்களுக்கு இலேசாக, அச்சமும் தட்டிவிட்டது!

அச்சத்துக்குக் காரணம் இல்லை. அறிவுலகப் புரட்சிப் பிரசாரம், எந்த வகையிலும், பலாத்காரத்தைக் கொண்டது அல்ல! இதை ஆயிரமாயிரம் தடவை தெளிவு படுத்தியதுடன், இந்தப் பிரசாரத்தின் பலனாக, ஒரு நாளாவது ஒரு இடத்திலாவது, "கோலாப்பூர்" நடந்ததில்லை — தமிழகத்தில் — அதாவது, ஒரு வகுப்பாரைத் தாக்கும் தீய காரியம் நடைபெற்றதில்லை.

இருந்தும், எவர்கள், நம்மை இதுகள், கத்துதுகள், யார் சட்டை செய்வார்கள், என்று கேவலமாகப் பேசினரோ, அவர்களே இப்போது, நம்மால் தமது சமுகத்துக்கு ஆபத்து வரும், என்று தாம் அஞ்சுவதாக அழுகிறார்கள்.

அன்றைய அலட்சியம், அதற்கு முன்னாலிருந்த ஆணவம், இரண்டும் தேவையற்றன, என்பது போலவே, இன்றைய அச்சம், அழுகுரல், ஆகியவையும், தேவையற்றன, பொருளற்றன-

"திராவிடக்கழகத்தின் துவேஷப் பிரசாரம் வலுத்து வருகிறது, சில இடங்களில் அவர்களுடைய பலாத்காரத்திற்கு அஞ்சி, சில வகுப்பினர் பத்திரமாக வெளியே செல்ல முடியாமல் தவிக்கின்றனர்."

என்று தீட்டும் அளவுக்கு, வீண் அச்சம், குடிபுகுந்து அவர்களைக் குடைகிறது.

இந்தப் பேராபத்தைப் போக்கக் காமராஜர் முயற்சிக்கிறாராம்-உவகையுடன் கூறிப் பூரிக்கிறார், ஜாதி குலக் கட்டுகள் எனக்கு இல்லை என்றும் கூறிக்கொள்ளும் அன்பர்,

"மந்திரிகள் சம்பளத்தை வாங்கிக் கொண்டு தூங்குகிறார்கள். ஸ்ரீகாமராஜ் அல்லும் பகலும் அலைகிறர் மக்கள் அல்லலைத் தவிர்க்க"
என்று புகழுரையைத் தருகிறார்.

பழியும்சுமத்துகிறார், முதலமைச்சர் மீது:

"திராவிடக்கழகத்தாருக்கு ஓமந்தூராரிடம் அனுதாபம் இருக்கிறது. அவர் தங்களுடைய பிரதிநிதி என்றே நினைக்கிறர்கள். அதேமாதிரி, ஓமந்தூராருக்கும் கழகத்தினர் கொள்கையில் நம்பிக்கையில்லாவிட்டாலும், அதன் தலைவர்களிடத்தில் அபிமானம் இருக்கிறதோ என்று சந்தேகிக்கவேண்டி இருக்கிறது-"

என்றும், தீட்டிவிட்டு, சந்தேகப்படவேண்டி நேரிட்ட காரணத்தையும் விளக்குகிறார்.

"பல ஜாதியினரிடையே பரஸ்பர சகோதர பாவமும் ஒற்றுமையும் இருக்கவேண்டியதைத் தடுக்கும் கழகத்தார் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஏன் அப்படிச் செய்யவில்லை என்றால், சட்டம்இடம் கொடுக்கவில்லை, என்று பதில் கூறுகிறார்."

இதுதான் சந்தேகத்துக்குக் காரணம்! திராவிடர்கழகத்தாரை, ஏன், அழிக்காமலிருக்கிறீர்! அவர்களின் பேச்சுக்குநாட்டிலே இடம்கிடைத்துவிட்டதே! எங்கள்கதிஎன்ன ஆவது? பலகாலமாக இருந்துவந்த ஆதிக்கம் என்ன ஆவது?—என்று அலறுகிறார் உலகம் திருந்திய வகையையும், அறிவுத் துறையிலே புரட்சி ஏற்பட்ட வரலாறுகளையும்,படித்திருக்கும்நண்பர் நாராயண ஐயங்கார்—மன்னிக்க வேண்டும்—ஐயங்கார் என்று கூறிக்கொள்ள விரும்பாதவர்! அவர், மனமே, இப்படி என்றால், ஐயங்கார், ஐயர், என்ற பட்டம், பிறரை அடக்கி ஆள்வதற்காக ஆண்டவன் இட்ட சட்டம் என்று நம்பும் 'குளத்தங்கரைகளின்' மனம், எப்படி இருக்கும்! கூறவா வேண்டும்!!

என்ன தேவையாம் இப்போது இவர்களுக்கு? திராவிடர்கழகத்தின் நாக்கை அறுக்க வேண்டும்—எப்படியாவது, யாராவது—எத்தகைய கருவி கொண்டாவது, ஓமந்தூரார் சொன்னது போல, சட்டம் இடம் தரவில்லையே—என்று கூறுபவர்கள் கூடாது ஆட்சிப்பீடத்தில்! ஆம்! கத்தி கூராக இல்லையா—தீட்டு, தீட்டு, நன்றாகத் தீட்டு!! சட்டம் இடம் தரவில்லையா? சரி சட்டத்தை, இடம் தருகிற மாதிரி திருத்து, புதுப்பி—என்று கூறுகிறார்கள்.

ஆதிக்கக்காரர்களின் மனதிலே ஒரு காலத்திலே, மனு வகுத்திருந்த சட்டங்களெல்லாம், நினைவிற்கு வருகின்றன போலும்!!

இந்தச் சட்டம் போதவில்லையானால், புதிய சட்டம் இயற்று.

இந்த மந்திரிகளால் முடியவில்லையானால், புதிய மந்திரிகளைக் கண்டுபிடி!

எதையோ செய்—யாரையோ ஏவு! —எப்படியாவது, திராவிடர்கழகத்தாரை, ஒழித்தாக வேண்டும்.

இந்த நிலைக்கு வந்துவிட்டார்கள், புருவத்தை நெரித்து, உதட்டைச் சிறிதளவு பிரித்து, "யார் பேசுவது! குளுமானுவோ? காக்கைக் கூட்டம்

ஏராளமா இருக்கும்! மனுஷா இருக்க மாட்டேளே"—என்று பத்தாண்டுகளுக்கு முன்பு கூடப் பரிகாசம் செய்த, 'பரப்பிரம்மங்கள்'.

* * *

இருக்கட்டும், இந்த முறை மாற்றத்தினாலே, இவர்கள் என்னபயனைக் காணப்போகிறார்கள் — அடக்குமுறைக்கருவிகளை மாற்றுவதாலே என்ன பலனைக்காணப்போகிறார்கள்! சித்தம் குழம்பியவர்களே! கொடுமையான சட்டங்களை வீச வீசத்தான், கழகத்தின் உரமும் திறமும், ஓங்கி வளரப்போகிறது. அலட்சியப்படுத்தினீர்கள்! கழகம் வளர்ந்தது! கேலி செய்தீர்கள்! கழகம வளர்ந்தது! அரசியல் அரங்கிலே நிறுத்திவைத்து அடித்து வீழ்த்தினீர்கள்! கழகம் வளர்ந்தது! பழி சுமத்தினீர்கன்! கழகம் வளர்ந்தது! யாரைச் சந்தேகிக்கிறீர்களோ, அதே ஓமந்தூரார், கூண்டோடு பிடித்தார் கழகத்தலைவர்களை! கழகம் வளர்ந்தது! சிறையிலே கழகத்தோழர்கள்! போலிசுக்கு மார் காட்டி நின்று தடியடிபடக் கழகத்தோழர்கள்! கல்லூரிகளிலே கழகத்தோழர்கள்! காங்கிரஸ் கமிட்டிகளிலே கழகத் தோழர்கள்! வளர்ச்சி குன்றவில்லையே, வாட்டி வதைத்தபோது. இனி புதியமந்திரிகளை ஏவியோ, புதிய ஆயுதங்களை வீசியோ, என்னகாணப்போகிறீர்கள்? அதிலும், அடக்குமுறையைக் கண்டு கண்டு பழக்கப்பட்டான நிலையில்!! புரட்சிச்சக்தியை முற்றும் உணரும் நிலையிலில்லா உள்ளத்தோரே! ஒவ்வொருநாளும், கழக ஏட்டிலே, நாங்கள் என்ன செய்தியைப்படிக்கிறோம், "இன்ன ஊரிலே கழகத்தோழர் சிறை சென்றார்— இன்ன தோழர், விடுதலையானார்—" என்ற செய்தியைத்தானே!

ஏறக்குறைய அறுபதினாயிரம்குடும்பங்கள், இன்று வீட்டிலே இருக்கும் மகன், நாளையதினம் சிறைக்குள் தள்ளப்படுவானோ, சித்ரவதைக்கு ஆளாக்கப்படுவானோ? என்ற எண்ணம் எழும்பியபடி உள்ள பாசறைகளாகிவிட்டன! நிலையை உணராமல் நிமிர்ந்துநில்! புதியபாணத்தைவீசு! —என்று கூறுகிறாய் ஆட்சியாளர்களுக்கு. பயனற்ற யோசனை! அதையும் செய்துபார்த்துவிடுங்கள்—அந்த ஆசையும் தீர்ந்துபோகட்டும், ஆனால், நெருப்பு அணையாது!!

என்றுதான், நேர்வழி மறந்தவர்களுக்குக் கூறுகிறோம்.

* * *

சட்டத்திலே இடமேயா இல்லை, இவர்களை ஒடுக்க, என்ற அளவோடு சமரசபோதனையைப் படித்திருக்கும், இந்துஸ்தான் இதழாசிரியர் கேட்கிறார். வேறோர் அன்பர், நாம், கட்டுரைத்துவக்கத்திலே குறிப்பிட்டபடி, இதோ வாள், இதோ வேல், இதோ தடி, இதோ நெருப்பு என்று எடுத்தெடுத்துத் தருவது போல், "இந்து" பத்திரிகையிலே, இன்றைய சட்டத்திலே என்னென்ன "செக்ஷன்களை" திராவிடர்கழகத்தார்மீது வீசலாம், என்பதற்கான யோசனையைத்தீட்டியிருக்கிறார்.

* * *

153

298

292

505

107

144

295

என்னும், இவ்வளவு செக்ஷன்களின்படியும், திராவிடகழகத்தார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமாம். எவ்வளவு கருணையுள்ளமனம்! எவ்வளவு அறிவாராய்ச்சி! சட்டநிபுணத்துவம்! இவ்வளவு ஆயுதங்களும் போதவில்லையானால், 1931-ம் வருடச்சட்டத்திலே, 23-வது பிரிவு இருக்கிறதாம், கழகத்தை வதைக்க! அதுவும் போதாது என்றால், 1867ம் வருடச்சட்டம் இருக்கிறதாம்! இவ்வளவு 'இடம்' சட்டத்திலே இருக்கும்போது, ஏன் திராவிடர் கழகத்தாரைச் சும்மாவிட்டிருக்கிறீர்கள்— என்று கேட்கிறார் இராமச்சந்திரன் என்ற பெயர் படைத்த புண்யவான், "இந்து" இதழ்மூலம்.

* * *

அந்த நாட்களிலே, வாள், வேல், தடி, என்று கொக்கரித்ததுபோல, இன்று, 153, 298, 292, என்று கூவுகிறார்கள்! எல்லாச் செக்ஷன்களும் ஒன்றுகூடித் தாக்கினாலும், மேலும் பலபுதிய சட்டங்கள் உண்டாக்கப்பட்டு, தாக்குதல் நடத்தினாலும், ஓமந்தூராரின் கரம் சரியில்லை என்று எண்ணி காமராஜர் கரத்திலே கொடுத்துத் தாக்குதலை நடத்தச் சொன்னாலும், விளைவு ஒன்றே ஒன்றுதான்— உயிர்போதும் அவ்வளவுதான்! இன்று நடைபெறும் அறிவுப்புரட்சித்துறைக் காரியம், உயிரைப்பற்றிய கவலையைக் கடந்தவர்களின் முயற்சி! என்று உறுதியுடன் உரைக்கும் இளைஞர்கள், ஆயிரமாயிரம் கழகத்தில் உள்ளனர். தங்கள் நாட்களிலே செய்யப்படும் காரியம், பிற்காலச்சந்ததியாருக்காக, என்ற பெரு நோக்கம் கொண்டவர்களின் முயற்சி! உடனடிப் பலனை எதிர்பாராமல், பணிபுரியும் பண்பினரின் முயற்சி! உருட்டல் மிரட்டல்களுக்குஅஞ்சும் பஞ்சைகளல்ல, சாபம், தூபம், இரண்டுக்குமே, பயப்படாமல், துவக்கப்பட்ட முயற்சி! காதறுத்த காலம், கண்ணைத் தோண்டிய காலம், கட்டிக் கொளுத்திய காலம் ஆகியவைகளைப் பற்றி, உலக வரலாற்று ஏடுகளிலே, படித்துப் படித்து, உள்ளத்தில் உரம் ஏற்றிக்கொண்டுள்ள, ஊழியர்களின் முயற்சி! எடுவாளை, என்று கூறியோ, வீசு 153-வது செக்ஷனை என்று மிரட்டியோ, வருகிறார் காமராஜர் என்று பேசியோ, அந்த முயற்சியை முறியடித்துவிட முடியாது. சொல்கிறோம்—சிந்தனைத் திறத்திலே மிச்சமீதி இருக்கும்போதே, எண்ணிப் பார்க்கட்டும். சீறிப்போரிட்டு, நம்மை அழித்தே தீருவதென்று சல்லடம்கட்டிவிட்டார்களானால், அதையும் செய்து, அவர்கள் ஆசையைத் தீர்த்துக்கொள்ளட்டும்; துவக்கப்பட்டு வேகமாக வளர்ந்து, வியக்கத்தக்க வெற்றிகளைப் பெற்றுத் தந்த இயக்கம் அழிந்துபடாது, அது, அணையாவிளக்கு!!

———

சென்ற ஆண்டிலே மட்டும், அமெரிக்காவில் 19 தினசரி இதழ்கள் புதிதாகத் துவக்கப்பட்டனவாம். இப்போது அமெரிக்காவில், 1781 தினசரிப் பத்திரிகைகள் வெளிவருகின்றன.

* * *

ஸ்டாலின், எழுதிய, சோவியத் நாட்டுத் திட்டத்தைப்பற்றிய விளக்கப் புத்தகம், 11 பதிப்புகள் வெளியிடப்பட்டனவாம். ரஷ்யாவில் பதிப்பிக்கப்பட்ட இந்தப் புத்தகம் இதுவரை, 30,000,000 பிரதிகள் வெளியிடப்பட்டனவாம்.

★

சென்றவாரத் தொடர்ச்சி

★ கல் சுமந்த கசடர் ★

—❀—

காட்சி 5.

வீரர்கள் கீதம்

இடம்:— **பாதை.**

அடிப்போம், மடல் கெடுப்போம், முகத்திடிப்போம், குடல்எடுப்போம், இடுப்பொடிப்போம், சிரம் உடைப்போம், வசை துடைப்போம், உயிர் குடிப்போம், வழி தடுப்போம், பழி முடிப்போம், இனி நடப்போம்.

கோஷம்:-

தூக்குவீர் கத்தியை, தாக்குவீர் எதிரியை

காட்சி 6.

இடம்:— **களம்.**

உறுப்பினர்:— **வீரன், வில்லவன்.**

வீ:— தலைவரே! மாற்றார்கள் மனம் மருண்டு விட்டனர். அவர்களின் படை வரிசை கலைகிறது. போர் வீரர்களின் முகத்திலே பயந் தோன்றிவிட்டது. நாம் முன்னேறித் தாக்கத் தாக்க எதிரியின் படை வரிசை பிண வரிசையாகி வருகிறது. எதிரிப் படைத் தலைவன், இறுமாப்பால் தமிழரைத் தாழ்வாகப் பேசிய கனகன் மிரண்டு ஓடுகிறான், விஜயன் பின்தொடர; நமது குதிரை வீரர்களை அனுப்பி அவனைப் பிடித்து விடுகிறேன். களத்திலே அவன் தலை உருளட்டும். அவன் பிணமாவதைக் கண்டு எஞ்சியுள்ள அவனது சேனையின் நெஞ்சு பஞ்சாகட்டும். தஞ்சம் தஞ்சமென்று அந்தப் பஞ்சைகள், நமது மன்னன் திருவடி பணிந்து கெஞ்சட்டும். கட்டளையிடுங்கள்! கண் கலங்கி நிற்கும் அந்தக் கதியற்றவனை, களத்திலே பிணமாக்கிக் கழுகுக்கு விருந்திடுகிறேன்.

வில்லவன்:— வேண்டாம், வீரத் தோழனே! விரண்டோடும் விஜயனும், கதி கலங்கிய கனகனும் புறமுதுகிட்டு மிஞ்சியுள்ள சேனையுடன் ஓடட்டும்.

வீர:- அங்ஙனமாயின் அவர்கள் தம் நகர் சென்றுவிடுவரே, பிழைத்துக்கொள்வரே!

வில்:- நண்பா! அவர்கள் ஓடித் தம் நகர் செல்லட்டும். அவர்களைத் துரத்திக்கொண்டு நாம் அந்த நகருக்குள் நுழைவோம். அவர் தம் அரண்மனை மாடியிலே அரசகுடும்பக் குமரிகள் ஓடிவரும்மன்னரைக்கண்டு ஈதென்ன கோலம், நமது கொற்றவன்இவ்வளவு கோழையா என்று கூறட்டும். வளையணிந்த மாதரின் விழியும் மொழியும், கேலியை ஏவட்டும். வெட்கம் அந்த வேந்தரின் விலாவைக் குத்தட்டும். வெட்கிவியர்த்து வெட வெடத்துக்கிடக்கும் அந்தவேளையிலே நாம் சென்று அவர்களைப் பிடிப்போம். அரண்மனையிலோ அழுகுரல் கிளம்பட்டும். ஆற்றல் மறவரோடுபோரிட்டால் அழிவு கிடைக்குமென்பதை ஆரியச்சேரி அறியட்டும். ஓடவிடு அந்த ஓடெடுத்து வாழ்ந்த வேந்தர்களை.

காட்சி 7.

இடம்:- களத்தில் ஓர்பகுதி

உறுபினர்:- தமிழ்வீரன் — ஆரிய வீரன்

நிலைமை:- [தமிழ்வீரன்:- பயந்தோடும் ஆரியனைப் பிடித்திழுத்து, முதுகில் ஒரு அறை கொடுத்து]

தமி. வீ:- ஏ ஆரியப்பதரே எங்கே உங்கள் வீரம், யோகம், யாகம்! அக்கினியாஸ்திரமெங்கே! [மறுபடி அடிக்க]

ஆரி. வீ:- [முதுகைத்துடைத்துக் கொண்டு அலறி] ஐயோ! இதுதான் அக்கினியாஸ்திரம்.

தமி. வீ:- எது?

ஆரி. வீ:- இதோ என் முதுகிலே சுரீரென்று கொடுத்தீர்களே நெருப்புப்போல......

தமி: வீ:- முண்டமே! ஓடிப்போ, பாமரமக்களிடம் பச்சைப்புளுகு பேசுவது, எம்மிடம் அக்கினியாஸ்திரம், வருணாஸ்திரம் உள்ளன என்று,

(அழுகிறான் ஆரியன்)

இதோ கண்களிலே நீர்பெருகுவதைப்பார்! வருணாஸ்திரம்! சீ...... போரிட லாயக்கோ, பழக்கமோ, பயிற்சியோ அற்றகூட்டம், வாலாட்டத்திலே மட்டும் குறைவில்லை.

காட்சி 8

இடம்:- களம்

உறுப்பினர்:- கனக, விஜயன் வில்லவன், வீரர்.

நிலைமை:- [நாலுபக்கமும் தமிழ் வீரர்கள் கனக விஜயரை சுற்றிவளைத்துக் கொள்கின்றனர். கனகவிசயர் ஓடப்பார்த்து முயன்று முடியாததால் பணிகின்றனர். அதுசமயம் வில்லவன் கோதை வந்து சேருகிறான்]

வில்ல:- விடாதீர்கள்! விடாதீர்கள்!! அந்த விப்பிரரை. [அருகே வந்து கனகவிசயரை ஏற இறங்கப் பார்த்துவிட்டு] சிறிப்போரிட்ட சிங்கங்களே! செருக்கைக் கக்கிய சழக்கரே! நெருப்புடன் விளையாடத் துணிந்த ஏமாளிகளே நில்லுங்கள்! தலையைக்கொஞ்சம் நிமிர்த்துங்கள்! உங்கள் முகத்தை நான் கொஞ்சம்பார்க்கிறேன். [முகத்தைப் பார்த்துப் புன்னகை புரிந்துவிட்டு] ஆகா! வீரம் வழிந்தோடுகிறது! அந்தக்கண்களிலே தீரத்தீப் பொறிபறக்கிறது! சீச்சீ வெட்கமில்லை உங்களுக்கு! வீரதீர கெம்பீரனும், எமது மன்னன்மீது, போரிட எப்படியடா துணிவு கொண்டீர்கள். எதை நம்பி இறங்கினீர்கள், இந்த ஆபத்தான விளையாட்டில்! நீங்கள் செய்தகுற்றத்திற்காக, இங்கேயே, இப்போதே, உங்கள் உடலைக் கூறு கூறாக்கி, நாய்க்கும், நரிக்கும் விருந்திடுவேன். ஆனால் நயவஞ்சகராகிய உங்களின், இந்த நிலையைக் காண வேண்டும் என் தமிழர், என்ற ஆசையால் நீங்கள் இன்னமும் பிணமாகாதிருக்கிறீர்கள். வஞ்சனையைக் கக்கும் உமது கண்கள், எமது தமிழரின் கண்கள் உமிழும் வீரக்கனலால் குருடாகட்டும்! மலையெனத் திரண்டுள்ள எம் தமிழ் வீரரின் தோளைக் கண்டதும், அவர் தம் தாளிலே வீழ்ந்து, பணிய வாருங்கள். தமிழகத்தைத் தாழ்வாகப் பேசியவன் கதி என்னாயிற்று என்பதை உலகு உணரட்டும். கர்வம் பிடித்துத் தமிழரை ஏசியநீங்கள் கல் சுமந்து வாரீர் தமிழகத்திற்கு. உங்கள் தலையிலே ஏற்றிவைக்கும் கல் கொண்டு, வீரப் பெண்மணி கண்ணகிக்குக் கோவில கட்டுவோம். வீரர்காள் தமிழகத்தின் மானத்தைக் காத்த தோழரே, ஏற்றுங்கள் கல்லை, இந்த கயவர் சிரமீது. சுமக்கட்டும்! இந்தச் சூது தவிர வேறறியாக் கூட்டம்! தமிழகத்தின்

(2-ம் பக்கம் பார்க்க)

நாடகமே உலகம்!

பட்டாளத்துக்காகப், பெரும் பணம் செலவாகிறது—இதனால் மக்களுக்குத் தேவையான, வசதிகளைச் செய்யப், பணம் மிஞ்சுவது கிடையாது. இதுதான் ஏகாதிபத்யமுறை. சொந்த ஆட்சி ஏற்பட்டால், பட்டாளச் செலவு, சரிபாதியாகக் குறைக்கப்படும் — வரிப்பணத்திலே மிகப் பெரும் பகுதி, மக்களின் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து வசதிகளுக்கே, செலவிடப்படும்— என்று சொன்னவர்களேதான், இன்று, வரியிலே, பெரும்பகுதியைப் பட்டாளத்துக்குச் செலவிடுகிறார்கள்—அதற்குச் சமாதானமும் கூறுகிறார்கள், நாட்டைப் பாதுகாக்கவும், உள்நாட்டு அமைதியைப் பாதுகாக்கவும், ராணுவம், முதல்தரமானதாக இருந்தாக வேண்டும், ஆகவே அதற்கு ஏற்றபடி, பணம் செலவிட்டுத்தான் தீரவேண்டும்—என்றும் பேசுகிறார்கள்.

இந்தப் புத்தி, ஏன் அன்று இல்லை, என்று நாம் கேட்கவில்லை—கேட்கக்கூடாதல்லவா — அவர்கள் ஆளவந்தார்களாகி விட்டனர்—அடக்குமுறையை வீசக் கற்றுக் கொண்டனர்.

உலகம், கேட்கிறது, உபதேசம் செய்தீர்களே! ஊராளவந்த பிறகு, உங்களுக்கே உண்மை நிலைமை தெரிகிறதல்லவா!—என்று.

உலகம், இவ்விதம் கேட்கும் போதுதான், நமக்குச் சங்கடமாக இருக்கிறது. நுணலும் தன் வாயால் கெடும், என்பதறியாமல், ஏன் இவர்கள், அன்று, ஏதேதோ கூறினர், இன்று, உலகு, கேலி செய்கிறதே, என்று எண்ணத் தோன்றுகிறது.

உலகிலே, பலநாடுகளுக்குப் போயிருக்கிறார்களே, தூதுவர்கள், அவர்களிடம் பேசும்போது, வெளிநாட்டு அரசியல் தலைவர்கள், கண் சிமிட்டியபடியும் கேலிப்புன்னகை காட்டியபடியும் தானே, பட்ஜட்டின் இராணுவச் செலவைப்பற்றிக் குறிப்பிடுவர். நமது தூதுவர்களின், முகம் எப்படி இருக்கும், அந்தச் சமயத்திலே! நினைத்தால், உள்ளபடி வெட்கமாக இருக்கிறது.

பட்டாளத்துச் செலவை, அதிகம், அதிகம், என்று கண்டிக்கவேண்டாம், இந்தியா ஒரு துணைக் கண்டம், ஆசியாவின் இருதயம் போன்றிருக்கிறது, இதன்மீது, மோப்பம் பிடித்துக்கொண்டு பாயும் நோக்கம் பல வல்லரசுகளுக்கு உண்டு; ஆபத்து நேரிடாதபடி இருக்க வேண்டுமானால், இராணுவம், பலமானதாக இருக்கவேண்டும், படைபலத்துக்காகச்செலவு, தாராளமாகச் செய்துதான் ஆகவேண்டும், என்று முன்பெல்லாம், பேசுவர், மாக்ஸ்வெல் போன்ற துரைமார்கள், வெலிங்டன் போன்ற வைசிராய்கள், 'சண்முகம் இராமசாமி' போன்ற ஏகாதிபத்யச் செல்லப் பிள்ளைகள். அவர்களைக் கண்டித்துப் பேசுவர், கனமாகா முன்பு, நேருக்கள், பிரசாதுகள், படேல்கள், — ஆகியோர்.

இன்று, மாக்ஸ்வெல், குரலை நேரு மூலம் கேட்கிறோம், பலதேவ்சிங் மூலம், வெலிங்டன் பேசக் காண்கிறோம், சண்முகமும் இராமசாமியும் பேசி வந்தவைகளை இன்று சர்தார் படேலும், சமரச பிரசாதும், பேசிடக் கேட்கிறோம்.

இவர்களின் போக்கு இவ்விதமாகி விட்டது கண்டு, முன்பு இதேவிதம் பேசி, இவர்களால் இகழப்பட்டவர்கள் என்ன எண்ணுவார்கள்—நினைக்கும்போது, உண்மையிலேயே, வெட்கமாகத்தான் இருக்கிறது.

யார் இந்த ஜனங்களை, முன்பு நாங்கள் என்ன சொன்னோம், இப்போது நாங்கள் என்ன சொல்கிறோம், என்று ஒப்பிட்டுப் பார்க்கச் சொன்னார்கள்! மறதி! இருக்கவேண்டாமா, மக்களுக்கு! என்று எண்ணுகிறார்கள், ஆளவந்தார்கள்!

அர்ஜுனன் வேடம் போடுபவன், அல்லி அர்ஜுனாவின்போது, அல்லியைத் தவிர இந்த அவனியிலே, என் ஆசைக்கினியவள், வேறு கிடையாது என்றுதான் பாடுகிறான்—சத்தியம் செய்கிறான்—ஆனால் அதே நடிகன், பவளக்கொடி நாடகமாடும்போது, பாரிலே, பவளக்கொடியைப் போல ஒரு அழகியைக் கண்டதே இல்லை, என்று பாடுகிறான், அவளைப் பெறாவிட்டால், உயிர் நில்லாது என்று உருகுகிறான் — அது போல, அன்று, பட்டாளத்துக்கு இவ்வளவு செலவிடுவது பாபம் என்று சொன்னோம் — அது ஒருவித நாடகம் — இன்று, பட்டாளச் செலவைக் குறைக்கச் சொல்பவன், தேசத்துரோகி என்று கூறுகிறோம் — இப்போதைய நாடகத்துக்கு இது தேவை—என்று எண்ணுகிறார்கள் போலும்! ஷேக்ஸ்பியர் சொன்னாரல்லவா, நாடகமே, உலகம் என்று! ஆனால் நாம், இவர்களை, நாடாள்பவர்கள் பட்டியில் அல்லவா சேர்க்கிறோம், நடிகர் பட்டியில் அல்லவே! அதனால்தான் நமக்குச் சங்கடமாக இருக்கிறது.

சேலம் மகாநாடு

"சேலத்தில் பிராமணர் இரண்டாவது மகாநாடு கூடி நடைபெற்றது. உபசரணைத் தலைவர், மகாநாட்டு தலைவர்களின் பேச்சுக்கள் பொதுத் தன்மை நிறைந்துள்ளன. இவர்கள் தெளிவான முறையில் இரண்டு தீர்மானங்களைச் செய்திருந்தால் தேசிய வாழ்வுக்கும், மக்கள் சமூக வாழ்வுக்கும் பேருதவியைச் செய்வதாக இருந்திருக்கும். நாட்டிலுள்ள பல்வேறு சிக்கல்களும் தீர வழி கோரியதாகவுமிருக்கும். அவற்றுள் ஒன்று, தமிழ் மொழியே தங்கள் தாய் மொழி என்பது. மற்றொன்று மனிதர்கள் யாவரும் ஒரே ஜாதி என்பதாகும். இந்த இரு தீர்மானங்களை ஒப்புக்கொள்ளாதவரை அந்த சமூகத்திற்கு எதிர்ப்பு சாஸ்வதமாகும். இத்தீர்மானங்கட்கு மாறுபட்டு வாழ்வதும் இனி சுலபமாக இராது. இந்த இரு மருந்துந்தான் மக்கள் வாழ்வுக்குத் தேவாமிர்தமாகும். இது கசந்தால் பலன் துன்பமும் பகையும் பாடும் பரிதாபமுந்தான். இவ்விரண்டுந்தான் உண்மை. பொய்யை நம்பிக் காலந்தள்ளிய நாட்கள் முந்திவிட்டன. இனி இவ்விரண்டையும் புறக்கணித்துக்கூடும் கூட்டமும் செய்யும் முயற்சிகளும் வீணாக முடிவதைத் தவிர உருப்படியாக மாட்டா."

(குமரன்)

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi Street. Kancheepuram.